விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 26
ஒலி 166 வள்ளுவர் ஆண்டு 2056 வைகாசி 20 செவ்வாய்க்கிழமை (03.06.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

உங்கள் ஆரோக்கியம் எமது நோக்கம்
Royal றோயல்
சுத்தமான பசு நெய்

ஆய்வுகூடத்தில் தரம்
பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகிறது.
Marketed By:- (C-3104)
சிவா நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச்சந்திக்கு அருகாமை)
தொ.பே : 021 2222 567



● 13ஆவது திருத்தம் இறுதியான தீர்வல்ல ● இனப் படுகொலைக்கு சர்வதேச விசாரணை அவசியம்

## "முன்னணி - ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து



தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கும் மற்றும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி ஆகிய தரப்புக்களிடையே கொள்கை ரீதியான இணக்கத்தை ஏற்படுத்தும் ஒப்பந்தமொன்று நேற்றுக் கைச்சாத்திடப்பட்டது. யாழ்ப்பாண நகரில் உள்ள தனியார் விடுதியில் இடம்பெற்ற நிகழ்வில் குறித்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

16ஆம் பக்கம் பார்க்க

### செம்மணி புதைகுழியில்

## 5 மண்டையோடுகளோடு எலும்பு எச்சங்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

செம்மணி புதைகுழியில் நேற்று 5 மண்டையோடுகளோடு எலும்புக்கூட்டு எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன. (15ஆம் பக்கம் பார்க்க)




### வடக்கு மாகாணத்தில் 31 சபைகளுக்கான

முதலாவது கூட்டம் தொடர்பான அறிவிப்பு

(கொழும்பு)

வடக்கு மாகாணத்திலுள்ள 31 உள்ளூராட்சி சபைகளுக்கான முதல்வர், பிரதி முதல்வர், தவிசாளர், உப தவிசாளரைத் 04ஆம் பக்கம் பார்க்க

### ஐ.பி.எல் இறுதிப் போட்டி இன்று பெங்களூரு - பஞ்சாப் மோதல்




04ஆம் பக்கம் பார்க்க



## சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவது அவசியம்

பொதுமக்களிடம் சுகாதார அமைச்சர்

(கொழும்பு)

நாட்டில் அதிகரித்துள்ள கொவிட் நோய் நிலைமைகள் தொடர்பில் சுகாதார 15ஆம் பக்கம் பார்க்க

## மனிதப் புதைகுழியாக செம்மணியை பிரகடனப்படுத்துக

நீதிமன்றில் விண்ணப்பம் முன்வைக்க சட்டத்தரணிகள் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

அரியாலை - செம்மணி சித்துபாத்தி மயானத்தில் மனித சடலங்கள் அடையாளம் காணப்பட்ட பகுதியை மனித புதைகுழியாக பிரகடனப்படுத்தக் கோரி 15ஆம் பக்கம் பார்க்க

### மருந்துத் தட்டுப்பாடு

## கொவிட் நிலைமையை அரசு சமாளிக்குமா?

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கேள்வி

(கொழும்பு)

நாட்டில் அத்தியாவசிய மருந்துகளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுகிறது. இதற்கிடையில், கொவிட் புதிய திரிபும் பரவி வருகிறது.

இந்த நிலைமையை சமா 04ஆம் பக்கம் பார்க்க

### தமிழகத்திலிருந்து

## தாயகம் திரும்பியவர் பிணையில் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழகத்தின் அகதி முகாமிலிருந்து 37 வருடங்களுக் 15ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் முன்னெடுக்கப்படும் இந்தியாவின் திட்டங்கள் தொடர்பில்

### பிரதம செயலாளருடன் இந்தியத் துணைத் தூதுவர் ஆராய்வு



(யாழ்ப்பாணம்)


வடக்கில் முன்னெடுக்கப்படும் இந்தியாவின் திட்டங்கள் தொடர்பில் பிரதம செயலாளருடன் இந்தியத் துணைத் தூதுவர் 15ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம் ஆழ்ந்த துயரடைகின்றது

# கண்ணீர் அஞ்சலி



அமரர். சச்சிதானந்தக் குருக்கள் பிரபாகரசர்மா
(கலாசார அதிகாரி – இந்தியத் துணைத் தூதரகம் – யாழ்ப்பாணம்)



அமரர். பிரபாகரசர்மா அக்ஷை
(சேர். ஜோன் கொத்தலாவல பல்கலைக்கழக விமானப் பராமரிப்பு பொறியியல் துறை இறுதி வருட மாணவன்)

தாயகத்தில் இருந்து வருகைதந்து ஐரோப்பிய நாடுகளில் அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகத்தின் முதுநிலைத் தேர்வு நடுவராகக் கடமையாற்றிய யாழ். பல்கலைக்கழக நடனத்துறையின் முதுநிலை விரிவுரையாளர் முனைவர் **திருமதி. சீதாலட்சுமி பிரபாகரசர்மா** அவர்களின் அன்புக் கணவர் பிரம்மஸ்ரீ சச்சிதானந்தக் குருக்கள் பிரபாகரசர்மா அவர்கள் வாகன விபத்தின் காரணமாக அகாலமரணம் அடைந்த நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த அவர்களுடைய மகன் செல்வன் பிரபாகரசர்மா அக்ஷை அவர்களும் அகாலமரணம் அடைந்த துயரச்செய்தி அறிந்து நிறுவகம் ஆழ்ந்த துயரடைகின்றது.

கலை கலாசாரத்தின் வளர்ச்சிக்கும், சமுதாய முன்னேற்றத்திற்குமாகத் தங்களை முழுமையாக அர்ப்பணித்துப் பணிசெய்து உயர்ந்த கௌரவத்துடன் அமைதியாக வாழ்ந்த அழகிய கலைக் குடும்பத்தில் இருந்து தந்தையைத் தொடர்ந்து தனையனும் பிரிந்து சென்றிருப்பது ஆழ்ந்த கவலையைத் தருகின்றது. அமரர் பிரம்மஸ்ரீ சச்சிதானந்தக் குருக்கள் பிரபாகரசர்மா அவர்களினதும், அமரர் பிரபாகரசர்மா அக்ஷை அவர்களினதும் ஆத்மா அமைதியடைய பிரார்த்திப்பதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம் தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றது.

**நாகராஜா விஜயகுமார் (சங்கர்)**
**தேர்வுப்பொறுப்பாளர்**
**அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம் - சுவிற்சர்லாந்து**

(1192)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்பு பொருளாதாரம் ஒழிக்கப்படும்-ஜனாதிபதி

(கொழும்பு)

**வரி செலுத்துவோரின் ஒவ்வொரு சதமும் பாதுகாக்கப்படும் எனவும், நாட்டில் உள்ள கறுப்புப் பொருளாதாரம் ஒழிக்கப்படும் எனவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.**

தேசிய வரி வாரத்தின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நேற்று ஆரம்பிக்கப்பட்ட தேசிய வரி வாரம் எதிர்வரும் 12 ஆம் திகதி வரை நடைபெறும்.

இந்த வாரத்தில் வரி செலுத்துதல் தொடர்பாக பொது மக்களுக்குப் புரிதலையும், விழிப்புணர்வையும் வழங்க எதிர்பார்ப்பதாகத் தெரிவிக்கப் படுகின்றது. (நி-8)



# வீதியை விட்டு விலகி மரத்துடன் மோதிய வான்




(கொழும்பு)

ஏ-9 வீதியில் அநுராதபுரம், மடாட்டுகம பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் மூன்று பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

நுவரெலியாவிலிருந்து கிளிநொச்சி நோக்கிப் பயணித்த வான் ஒன்று வீதியை விட்டு விலகி அருகிலிருந்த மரத்தின் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின் போது வானில் பயணித்த மூன்று பேர் காயமடைந்துள்ள நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-8)

# ஓய்வு பெறுகிறார் நிதி அமைச்சின் செயலர்

(கொழும்பு)

நிதி அமைச்சின் செயலாளர் மகிந்த சிறிவர்தன, இந்த ஜூன் மாத இறுதியில் நிதி அமைச்சின் செயலாளர் பதவியில் இருந்து ஓய்வு பெற உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நிதி அமைச்சின் செயலாளர் பதவியில் இருந்து ஓய்வு பெற்ற பிறகு, மகிந்த சிறிவர்தன ஆசிய வளர்ச்சி வங்கியின் மாற்று நிர்வாக இயக்குநராகப் பொறுப்பேற்பார் என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார். (நி-8)

# சீரற்ற காலநிலையால் 60 ஆயிரம் மின் தடைகள்

(கொழும்பு)

கடந்த சில நாட்களாக தொடர்ந்த சீரற்ற வானிலை காரணமாக நாடு முழுவதும் சுமார் 60 ஆயிரம் மின் தடைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

அவற்றில் இதுவரை ஐம்பது சதவீதத்திற்கும் அதிகமான மின்வெட்டுகள் சீர் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, நேற்று முன்தினம் வரையான நிலவரப்படி, 33 ஆயிரத்து 208 மின் தடைகள் மீட்டெடுக்கப்பட்டுள்ளன.

மத்திய மற்றும் மேற்கு மாகாணங்களிலேயே அதிக எண்ணிக்கையிலான மின் தடைகள் பதிவாகியுள்ளன. (நி-8)

# 45 மில்லியன் ரூபா மதிப்புள்ள இருதய மருந்துகள் ஏற்றுமதி

(கொழும்பு)

ரூ.45 மில்லியன் மதிப்புள்ள இருதய மருந்துகள் முதலாவதாக பெருவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

இதனை அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ, செலோஜென் லங்காவின் தலைவரைச் சந்தித்து உறுதிப்படுத்தினார்.

உள்ளூர் மருந்துகளுக்கான அரசாங்கத்தின் ஆதரவை அவர் மீண்டும் உறுதிப்படுத்தியதுடன் அனைவருக்கும் நியாயமான விலை நிர்ணயம் மற்றும் தரத்தையும் வலியுறுத்தினார்.

மருந்துகள் ஏற்றுமதியில் இலங்கை ஒரு புதிய மைல் கல்லை எட்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் மருந்துகள் ஏற்றுமதி, இறக்குமதிக்கு வெளிநாட்டு அரசாங்கங்களின் ஆதரவு வேண்டும் என்ற வர்த்தமானி வெளியிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் தற்போது உள்ளூர் மருந்து ஏற்றுமதிக்கு ஆதரவு கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. (நி)

# பேருந்துக் கட்டண திருத்தம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

ஜூலை மாதம் செயற்படுத்தத் திட்டமிடப்பட்டிருந்த வருடாந்த பேருந்துக் கட்டண திருத்தத்தை ஒகஸ்ட் வரை ஒத்திவைக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டின் தற்போதைய சூழ் நிலையைக் கருத்தில் கொண்டு, ஜூலை மாதத்தில் பேருந்துக் கட்டணங்களைத் திருத்துவது நடைமுறைக்கு சாத்தியமில்லை என்று இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜேரத்ன குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதேஅவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (நி-8)

# வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளான பேருந்து

(கொழும்பு)

கொழும்பிலிருந்து மஸ்கெலியா நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்து சபை அவிசாவளை டிப்போவிற்கு சொந்தமான பேருந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது.

நோட்டன் பிரிட்ஜ் தியகல வீதியில் நேற்றுக் காலை இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

திடீரென ஏற்பட்ட இயந்திரக் கோளாறே விபத்துக்கான காரணம் என நோட்டன் பிரிட்ஜ் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-8)




# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி. தயாளசௌந்தரி நிரஞ்சன்
அவர்களின் அன்புத் தாயார்



அமரர். சரோசாதேவி நாகமணி

அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளை தெரிவிப்பதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.

(C-3102)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டமட்ட கராத்தே சுற்றுப்போட்டி கடந்த சனிக்கிழமை மந்திகை உள்ளக விளையாட்டரங்கில் மாவட்ட விளையாட்டு அதிகாரி தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.இப்போட்டியில் கலந்து கொண்ட I.S.S.K.A கழக மாணவர்கள் 11 தங்கம் உட்பட 20 பதக்கங்கள் பெற்றுசாதனை படைத்துள்ளனர்.





சண்டிலிப்பாய் இந்து விளையாட்டுக்கழக வொலிபோல் பிறீமியர் லீக் வீரர்கள் அறிமுக விழா கடந்த வெள்ளிக்கிழமை சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி விளையாட்டு பயிற்றுவிப்பாளர் ஜெ.ஹரிதாஸ் தலைமையில் இடம்பெற்றது.

# ஐ.பி.எல் சம்பியன் யாருக்கு?

## பெங்களூர்-பஞ்சாப் இன்று பலப்பரீட்சை



2025 ஆம் ஆண்டு ஐ.பி.எல் போட்டியின் இறுதிப் போட்டி அகமதாபாத்தில் இன்று இரவு 7.30 மணிக்கு நரேந்திர மோடி மைதானத்தில் ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணி பஞ்சாப் கிங்ஸ் அணியுடன் மோதவுள்ளது.

ஐ.பி.எல் போட்டியில் பிளே ஆப் சுற்று கடந்த மாதம் 29 ஆம் திகதி ஆரம்பமாகியது. இந்நிலையில் குவாலியைர் 1 ஆவது ஆட்டத்தில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் பஞ்சாப் கிங்ஸ் அணியை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறியிருந்தது. அத்துடன் எலிமினேட்டர் ஆட்டத்தில் மும்பை இந்தியன் அணி 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் குஜராத்டைட்டன்ஸ் அணியை வெளியேற்றியது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற குவாலிபையர் 2 ஆவது ஆட்டத்தில் பஞ்சாப் கிங்ஸ் அணி மும்மை இந்தியன்ஸ் அணியை 5 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி 2 ஆவது முறையாக இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இந்நிலையில் இன்று நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில் ரோயல் சேலஞ்சர்ஸ பெங்களூர் அணியை பஞ்சாப்கிங்ஸ் அணி எதிர்கொள்கிறது. இந்த இரண்டு அணிகளில் எந்த அணி வென்றாலும் முதல் முறையாக ஐ.பி.எல் கோப்பையை கைப்பற்றும் அணி என்ற பெருமையைப் பெறும் இவ்விரு அணிகளும் வெற்றி பெற போராடும் என்பதால் இறுதிப் போட்டி பெருவிருந்தாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-3-8)

## கொவிட் ...

ளிப்பதற்கு அரசாங்கத்திடம் எந்த முன்னாயத்தத் திட்டங்களும் இல்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விசனம் வெளியிட்டுள்ளார்.

விசேட அறிவிப்பொன்றை வெளியிட்டு எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு விசனம் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,


தற்போது நாட்டில் பல்வேறு மருந்துகளுக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவி வருகிறது. சுகாதார அமைச்சின் மருந்து வழங்கல் பிரிவில் 180 வகையான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. வைத்தியசாலை கட்டமைப்பில் மேலும் 50 வகையான அத்தியாவசிய மருந்துகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இவற்றில் நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகள், வலி நிவாரணிகள், இன்சுலின், இதய நோய் மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களும் உள்ளடங்குகின்றன. இது தொடர்பில் நாம் பாராளுமன்றத்தில் கேள்வியெழுப்பிய போதிலும் அரசாங்கத்திடமிருந்து எவ்விதப் பதிலும் கிடைக்கவில்லை. இந்தப் பிரச்சினைக்கான தீர்வினையும் அரசாங்கம் முன்வைக்கவில்லை.

எல்.பி.8.1 எனப்படும் கொவிட் மாதிரிகளின் துணை மாறுபாடு தற்போது சிங்கப்பூர், தாய்லாந்து, இந்தியா மற்றும் ஹொங்கொங்கில் பரவி வருகின்றது. இந்தத் துணைவகை மாறுபாடுகள் குறித்து நமது நாட்டில் எந்தவிதப் பரிசோதனைகளும் நடைபெறுவதாகக் காணமுடியவில்லை. இந்தத் துணை மாறுபாடு திரிபுகள் தொடர்பாக எமது நாட்டிலும் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

மருத்துவமனைகளில் இதனுடன் தொடர்புடைய அறிகுறிகளுடன் இருக்கும் நோயாளர்கள் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட வேண்டும். இந்நிலைமையில் தற்போது சின்னம்மை நோயும் அதிகரித்துள்ளது. இந்நோய்க்கு ஆகக் குறைந்தது 6 வாரங்களாவது தொடர்ச்சியாக சிகிச்சையளிக்க வேண்டும். இதனைக் கட்டுப்படுத்துவதற்கும் முறையான திட்டமொன்று முன்னெடுக்கப்படவேண்டும். (ம-7)

## 465, 000 ரூபாய்க்கு ஏலமிடப்பட்ட மாங்கனி



(யாழ்ப்பாணம்)

வண்ணை - கோட்டையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணியர் சுவாமி தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவதில் 8ம் நாள் திருவிழாவான மாம்பழத்திருவிழா நேற்றுக் காலை சிறப்புற இடம்பெற்றது.

இதில் விநாயகருக்கு சிவபெருமானால் வழங்கப்பட்ட திருமாங்கனியை அடியார்களுக்கு ஏலவிற்பனைசெய்யப்பட்ட போது பலதரப் போட்டிக்கு மத்தியில் 4 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய்க்கு குறித்த திருமாங்கனி அடியவரால் ஏலத்தில் கொள்வனவு செய்யப்பட்டது. (ம-7)

## வடக்கு ...

தேர்ந்தெடுப்பதற்கான திகதி விபரம் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபுவால் நேற்றுத் திங்கட்கிழமை (02) வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, யாழ்.மாநகர சபையின் முதல்வர், பிரதிமுதல்வர் ஆகியோரைத் தெரிவு செய்வதற்கான முதலாவது கூட்டம் எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 08.30 மணியளவில் யாழ்.மாநகரசபையின் சபா மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மற்றும் ஏனைய உள்ளூராட்சி மன்றங்களுக்கான முதலாவது கூட்டம் தொடர்பான அறிவிப்பும் வெளியிடப்பட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முப்படைகளில் இருந்து தப்பியோடிய 2,983 பேர் கைது

(கொழும்பு)

முப்படைகளில் இருந்து தப்பிச்சென்ற அதிகாரிகள் உட்பட 2,983 வீரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி முதல் மே மாதம் 30 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போது அவர்கள் கைது செய்யப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட வீரர்களில் 2,261 பேர் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. அத்தோடு கடற்படையைச் சேர்ந்த 194 பேரும், விமானப் படையைச் சேர்ந்த 198 பேரும் கைது செய்யப்பட்டனர்.

மேலும், இலங்கை பொலிஸ் துறையிலிருந்து தப்பியோடிய 330 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாக இலங்கை பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (நி)

# மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் வடக்கு அருள் மிகு பெரிய தம்பிரான் ஆலய பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் (2025) எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேகத்திற்கு முன்னதாக எதிர்வரும் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு கர்மாரம்பத்துடன் ஆரம்பமாகி மறுநாள் 7 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிமுதல் மாலை 4 மணி வரை பால்க்காப்புச் சாத்துதல் நிகழ்வும் தொடர்ந்து 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு கும்பாபிஷேகமும் இடம்பெறவுள்ளதென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (நி-3-8)


உ
தில்லையம்பதியாள் துணை

## சீர்மேவு யாழ்ப்பாணம் கோண்டாவில் ஈழத்து தில்லையம்பதி
## அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்
## ஐம்பதாவது ஆண்டு
### வசந்த வைகாசி மஹோற்சவ பெருவிழா-2025

**புதிய திருமஞ்சம் வெள்ளோட்ட விழா**
**03.06.2025 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணி**
திருமஞ்ச நிர்மாணம்
"கலாவித்தகர்"
விஸ்வப் பிரம்மஸ்ரீ பத்மநாதன் சுரேந்திரன்
அர்த்தநாரீஸ்வரர் சிற்பாலயம்-திருநெல்வேலி



காலை- 7.30 மணிக்கு அபிஷேகம்
9.00 மணிக்கு மூலஸ்தான பூஜை
9.30 மணிக்கு ஸ்தம்ப பூஜை
10.30 மணிக்கு வசந்த மண்டபபூஜை
11.30 மணிக்கு அம்பாள் வீதி உலா வரும் காட்சி

இரவு- 7.00 மணிக்கு வசந்த மண்டப பூஜை
இரவு- 8.30 மணிக்கு புதிய திருமஞ்சத்தில் அம்பாள் வீதி உலாவரும் காட்சியும் இடம்பெறும்.
ஈழத்தின் புகழ்பூத்த தவில் நாதஸ்வர கலைஞர்களின் நாதஸ்வர மேளக்கச்சேரியும் நடைபெறும்.

தில்லையம்பதியாளே! சிவகாம சுந்தரியே! சரணம்!

5 ஆம் திருவிழா உபயகாரர்,
முத்தொளி.

திருக்கோயில் பரிபாலனசபை,
தில்லையம்பதி.


# இராசிபலன்

03.06.2025
வைகாசி 20 , செவ்வாய்க்கிழமை
அட்டமி பின்னிரவு 2.00 மணிவரை

பூரம் பின்னிரவு 4.49 மணிவரை
சுபநேரம் 10.22-11.52 மணிவரை
இராகுகாலம் 2.52-4.22 மணிவரை

சந்திராஷ்டமம்
திருவோணம்.

வளவன்

**மேஷம்** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பெற்றோரின் ஆதரவால் பெருமைகள் வந்து சேரலாம்.

**ரிஷபம்** பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, நம்பி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழும் நாள், அரசு வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்** இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், உறவினர் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்,பேச்சில் கனிவு பிறக்கும், பொருள் வரவிற்கு அடித்தளம் அமைப்பீர்கள்.

**கடகம்** பயணங்களால் பலனுண்டு, தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**சிம்மம்** தொழிலில் ஆக்கபூர்வமான மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள் சயனசுகக் குறைவான நாள்.

**கன்னி** திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், பொது வாழ்வில் புகழ் கூடும் நாள்.

**துலாம்** எதிர்பாராத தன வரவுகள் வந்து சேரலாம், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், பொது வாழ்வில் புகழ் கூடும், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**விருச்சிகம்** எதிர்பார்த்த காரியமொன்று இன்று நடைபெறும் வாய்ப்புண்டு, தித்திக்கும் பயணங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, புதிய முயற்சிகளில் முன்னேற்றமுண்டு.

**தனுசு** கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, உடல்ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், பயணத்தால் மன உளைச்சல் ஏற்படலாம்.

**மகரம்** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**கும்பம்** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, உடல் நலன் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள்.

**மீனம்** வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பணத் தேவைகள் பூர்த்தியாகும்.

அளவற்ற செல்வமுடையவர்களுக்கு அளவற்ற தேவைகளும் உண்டு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



வெளியான க.பொ.த உயர்தர பரீட்சையில் மாவட்ட ரீதியாக முதலிடம் பெற்ற சாதனையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வானது நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

வடக்கு மாகாணத்தில் ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த, ஆறு துறைகளில் சாதித்த மாணவர்களும் இவ்வாறு கௌரவிக்கப்பட்டனர். இந்தக் கௌரவிப்பு நிகழ்வானது தொண்டைமானாறு தேசிய வெளிக்கள நிலையத்தின் ஏற்பாட்டில் அவர்களது அலுவலகத்தில் நடைபெற்றது.

(படங்கள்:-சிவசாந்தன், கஜிந்தன்)

# பேச்சுத்திறன் காண் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

ஓட்டுமடத்தைச் சேர்ந்த அமரர்களான ச.நடராசா, ந.இரத்தினம் ஆகியோரின் ஞாபகார்த்தமாக குடும்ப உறவுகளின் அனுசரணையுடன் ஆறுகால்மடம் அறிவொளி சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் அறிவொளி முன்பள்ளி சிறார்களின் பேச்சுத் திறன் காண் நிகழ்வு (2025) எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை முற் பகல் 9 மணிக்கு ஆறுகால் மடத்தில் அமைந்துள்ள அறிவொளி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

அறிவொளி சனசமூக நிலையத் தலைவர் சி.க.தம்பிராசா தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வண்ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலய அதிபர் இ.ராஜ்கரன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.கோட்ட முன்பள்ள இணைப்பாளர் செல்வி. பி.தர்சினி, யாழ்.மாநகர சபை 10 ஆம் வட்டார உறுப்பினர் சே.மதுசிகான், ஜே/88 புதிய சோனகதெரு கிராம அலுவலர் திருமதி.தீபன் பிரதீபா, ஜே/88 புதிய சோனகதெரு பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் க.சுதாகரன் மற்றும் ஜே/88 புதிய சோனக தெரு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. எட்வின் ஜெயக்குமார் மேரிஸ்ரெலா ஆகி யோரும் கலந்து கொள்ளவுள்ளதுடன் வரவேற்புரையினை முன்பள்ளி பொறுப்பாசிரியர் திருமதி. சு.சுபிதா, நன்றி யுரையினை அறிவொளி சன சமூக நிலைய செயலாளர் சி.கிருபாகரன் ஆகியோரும் வழங்கவுள்ளனர். (நி-3)

# இரத்மலானையிலிருந்து யாழ்.வந்த விமானம்

(யாழ்ப்பாணம்)

டேவிட் பிரிஸ் ஏவியேஷன் நிறுவனத்தின் பரீட்சார்த்த விமானம் இரத்மலானை விமான நிலையத்திலிருந்து யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தை நேற்று திங்கட்கிழமை வந்தடைந்தது.

டேவிட் பிரிஸ் ஏவியேஷன் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரையான மக்கள் போக்குவரத்துக்கான பயணங்களை ஆரம்பிக்கின்றது.

அரசாங்கத்தின் எதிர்காலத் திட்டங்களுக்கு அமைவாக உள்ளூர் விமான சேவையினை விருத்தி செய்யும் நோக்கில் டேவிட் பிரிஸ் ஏவியேஷன் நிறுவனமானது, இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையின் மேற்பார்வையின் கீழ் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு விமான சேவையினை ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டுள்ளது.

இதற்காக இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் பரிசோதிப்பவர்களின் மேற்பார்வையின் கீழ் விசேட கண்காணிப்பு விமானப் பயணத்தினை இன்றையதினம் இரத்மலானை விமான நிலையத்திலிருந்து யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் வரை மேற்கொண்டுள்ளது.

குறித்த விமானமானது நேற்று பி.ப 1.05 மணியளவில் யாழ்ப்பாணம் - பலாலி சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது. (நி-33-104)

# புதிய திருமஞ்ச வெள்ளோட்ட விழா

(யாழ்ப்பாணம்)

சீர்மேவு யாழ்ப்பாணம் கோண்டாவில் ஈழத்து தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் ஆலய புதிய திருமஞ்ச வெள்ளோட்ட விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற வுள்ளது.

தில்லையம்பதி பரிபாலன சபைத் தலைவர் சி.ஆனந்தராஜா தலைமையில் இடம்பெறவுள்ள இவ் விழாவில் வரவேற்புரை- தில்லையம்பதி பரிபாலனசபையின் உப செயலாளர் பரமசாமி சிவசங்கரன், ஆசியுரை- தில்லையம் பதி பிரதம குரு சிவப்பிரம்ம ஸ்ரீ வைத்தீஸ்வர சுஜேந்திர சிவாச்சாரியார் மற்றும் மருதனார்மட அருள்வளவர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில் தர்மகர்த்தா சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக் குருக்கள் ஆகியோரும், வாழ்த்துரை- முனைவர் திருமதி.கலாநிதி மனோன் மணி சண்முகதாஸ் மற்றும் வலம்புரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம் ஆகியோர் வழங்குவதுடன் ஏற்புரை- சிற்பாச்சாரியார், நன்றியுரை தில்லையம்பதி பரிபாலன சபையின் செயலாளர் ந.கிஷோக்குமார் ஆகியோரும் நிகழ்த்த வுள்ளனர்.

அத்துடன் திருமஞ்ச நிர்மாண சிற்பாச்சாரியார் திருநெல்வேலி அர்த்த நாரீஸ்வரர் சிற்பாலய கலாவித்தகர் விஸ்வப் பிரம்மஸ்ரீ பத்மநாதன் சுரேந்திரன் குழுவினருக்கான கௌரவிப்பும் இடம்பெறவுள்ளதென திருக்கோவில் பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (நி-3-8)

# நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கட்டடக்கலைஞர் இ.மயூரநாதனின் யாழ்ப்பாண நகரத்தின் வளர்ச்சி வரலாறு (1621-1948) நூல் வெளியீடு நாளை புதன்கிழமை மாலை 3 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் துணைவேந்தர் சி.சிறிசற்குணராஜா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார். நிகழ்வில் புவியல்துறைத் தலைவர் நாக.பிரதீபராஜா அறிமுகவுரை நிகழ்த்த பேராசிரியர்கள் பொ.பாலசுந்தரம்பிள்ளை, தா.சனாதனன் மற்றும் ம.நிலாந்தன் ஆகியோர் மதிப்பீட்டுரைகளை நிகழ்த்துவர். ஏற்புரையை நூலாசிரியர் கட்டடக்கலைஞர் இ.மயூரநாதன் நிகழ்த்துவார். (நி)

# அங்குரார்ப்பண கூட்டம்

(யாழ்ப்பாணம்)

புலோலி வடகிழக்கு முதியோர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் கடந்த புதன்கிழமை காலை 10 மணிக்கு புலோலி வடகிழக்கு உத்திராவத்தை "ராஜன் பதி" அன்னதான மண்டபத்தில் புலோலி வடகிழக்கு கிராம சேவகர் அலுவலர் தி:ரங்கநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இக் கூட்டத்தில் பிரதம விருந்தினராக வடமராட்சி வடக்கு பிரதேச செயலக சமூக சேவைப்பிரிவின் முதியோர் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. வேணுகாணன் [illegible] கலந்து சிறப்பித்திருந்தார். (நி-3-8)

# சந்தைகளில் நேற்றைய விலை


| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 300 | 400 | 350 | 600 |
| உருளைக்கிழங்கு | 220 | 180 | 180 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 500 | 500 | 350 | 600 |
| தக்காளி | 700 | 700 | 650 | 600 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 280 | 250 | 200 |
| கோவா | 450 | 500 | 550 | 350 | 500 |
| கரட் | 800 | 900 | 900 | 750 | 1000 |
| பூசணி | 160 | 150 | 160 | 150 | 200 |
| புடோல் | 150 | 200 | 200 | 220 | 300 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 150-350 | 350 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 130 | 140 | 150 | 120 | 150 |
| பாகற்காய் | 600 | 1000 | 1000 | 650 | 1000 |
| வெண்டக்காய் | 200 | 150 | 200 | 100-250 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 350 | 250 | 200 | 300 |
| பயற்றங்காய் | 200 | 400 | 400 | 200 | 200 |
| லீக்ஸ் | 350 | 430 | 450 | 280 | 500 |
| பீற்றூட் | 600 | 600 | 500 | 450 | 600 |
| கறிமிளகாய் | 650 | 800 | 400 | 600 | 800 |
| முருங்கைக்காய் | 1800 | 1000 | 1200 | 1000 | 1500 |
| போஞ்சி | 400 | 550 | 600 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 350 | 150 | 350 | -- | 500 |
| கீரை - 1 பிடி | 100 | 120-160 | 200 | 100 | 150 |
| தேசிக்காய் | 350 | 300 | 200 | 250 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 250 | 250 | 100-220 | 200-240 |
| இராசவள்ளி | 650 | 650 | 500 | 500 | 700 |
| வெங்காயப்பூ | 800 | 700 | 700 | -- | 800 |
| முள்ளங்கி | 150 | 200 | 200 | 150 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 80 | 80 |
| [illegible] | -- | -- | 100 | -- | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமான நிலையங்களில் பி.சி.ஆர் பரிசோதனைகளை முன்னெடுக்குமாறு வலியுறுத்து

(கொழும்பு)

**இந்தியா, தாய்லாந்து உள்ளிட்ட நாடுகளில் பரவி வரும் கொரோனா வைரஸ் தொற்றின் பரவலைக் கருத்திற் கொண்டு துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களில் தொற்றாளர்களை அடையாளம் காணும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என இலங்கை பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**




சிலாபத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய, அந்தச் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன இதனைத் தெரிவித்தார்.

இவ்வாறான இடங்களில் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படாவிட்டால் இலங்கையில் கொரோனாப் பரவலின் வேகம் அதிகரிக்கும் அபாயமுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தற்போது வைத்திய சாலையில் காய்ச்சல் காரணமாக அனுமதிக்கப்படுபவர்களிடமே பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஆனால் துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் போன்ற இடங்களில் பீ.சீ. ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார். (நி)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

(யாழ்ப்பாணம்)

கைதடி கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட கைதடி நாவற்குழி கமக்காரர் அமைப்பின் 2025-2026 ஆம் ஆண்டிற்கான பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் இன்று செவ்வாய்க் கிழமை காலை 10 மணிக்கு கைதடி நாவற்குழி ஸ்ரீ முருகன் சனசமூக நிலைய மண்டபத்தில் ஐ.சத்தியசீலன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

உறுப்புரிமை பெற்ற அனைத்து விவசாயிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (3-8)

## எரிவாயு விலையில் மாற்றமில்லை

(கொழும்பு)

ஜூன் மாதத்திற்கான லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட மாட்டாது என நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னர் காணப்பட்ட விலையிலேயே லிட்ரோ எரிவாயு சிலிண்டர் விற்பனை செய்யப்படும் என நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை இம்மாதத்திற்கான சமையல் எரிவாயுவின் விலைகள் மாற்றப்படமாட்டாது என லாஃப் எரிவாயு நிறுவனமும் தெரிவித்துள்ளது. (நி)

## இளைஞர் கழக அங்குரார்ப்பண நிகழ்வு

(வவுனியா)

இளைஞர் அனைவரும் ஒன்று கூடும் இடம் இளைஞர் கழகம் என்னும் தொனிப் பொருளிலான தேசிய வேலைத் திட்டம் வவுனியாவில் நேற்று முன் தினம் ஆரம்பித்து வைக் கப்பட்டது.

நாடு பூராகவும் இளைஞர் கழகங்களை வலுப்படுத்தும் வேலைத் திட்டம் இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஊடாக முன் னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதற்கு அமைவாக, கடந்த இரு வருடங்களாக இளைஞர் கழகங்கள் அமைக்கப்படாத நிலையில் வவுனியா மூன்று முறிப்பு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் வவுனியா மாவட்டத்தில் முதலாவது இளைஞர் கழக அங்குரார்ப்பணம் இளைஞர் விவகார பிரதி அமைச்சர் ஏரங்க குணசேகரவின் பங்குபற்றலில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத் தின் வடமாகாண பணிப்பாளர் காமினி, உதவிப் பணிப்பாளர் ரவீந்திர ரூபசிங்க, மாவட்ட இளைஞர் சேவைகள் மன்ற அதிகாரி சிவானி மற்றும் இளைஞர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (8-250)

## வவுனியா கூமாங்குளம் நூலகவீதி திருத்தப்பணிகள் ஆரம்பம்

(வவுனியா)

வவுனியா, கூமாங்குளம், நூலக வீதி 12 மில்லியன் ரூபாய் நிதியில் திருத்த பணிகள் ஆரம்பித்துள்ளதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் திருத்தப் பணிகளை ஆரம்பித்து வைத்த பின் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா கூமாங்குளம் நூலக வீதி முழுமையாக தார் இடப்படவுள்ளது. 12 மில்லியன் ரூபாய் பெறுமதியான இந்த வேலைத் திட்டம் முலம் கூமாங்குளம் நூலக வீதி கொங்கிறீட் வீதியுடன் இணைக்கப்படவுள்ளது.



பல வருடங்களாக இந்த வீதி திருத்தப்படாமல் இருந்தமையால் மக்கள் சிரமத்தை எதிர்நோக்கி இருந்தார்கள். இதனை தார் வீதியாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் விரைவில் மக்களிடம் இந்த வீதி கையளிக்கப்படும் எனவும் தெரிவித்தார். (8-250)


வரணி

சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலயம்

பதிவு HA/05/JA/1180

வருடாந்த அலங்கார உற்சவம்

விசுவாவசு வருஷம் வைகாசி மாதம் 26 ஆம் நாள் (09.06.2025) திங்கட்கிழமை பொங்கல் உற்சவத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 14 நாட்கள் அலங்கார உற்சவம் இடம்பெறவுள்ளது.

09.06.2025 - திங்கட்கிழமை பொங்கல் (1ஆம் திருவிழா)
16.06.2025 -திங்கட்கிழமை வேட்டைத்திருவிழா
21.06.2025 -சனிக்கிழமை தேர்த்திருவிழா
22.06.2025 -ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழா

இடம்பெற கண்ணகை அம்மன் அருள் பாலித்துள்ளார். அடியார் அனைவரும் கலந்து அருள் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

- விழாக் காலங்களில் தற்காலிக வியாபார நடவடிக்கை மேற்கொள்வோர்
- ஒளியமைப்பு சேவை வழங்குநர்கள்
- பந்தல் சேவை மற்றும் பிளாஸ்ரிக் கதிரைகள் வாடகை வழங்குநர்கள்
- மேற்படி சேவை வழங்கும் உரிமையாளர்களுக்கான கேள்வி கோரல்கள் 05.06.2025 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு ஆலய முன்றலில் இடம்பெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

ஆலய பரிபாலன சபை

(சி-3103)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாரதம்

### 132 ஆண்டுகளின் பின்

# அசாமில் ஒருநாளில் அதிக மழை வீழ்ச்சி



(டில்லி)


ஜூன் முதலாம் திகதி முதல் அசாமில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ள நிலையில், அசாமின் இரண்டாவது பெரிய நகரமான சில்சாரில் கடந்த 24 மணி நேரத்தில் 415.8 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இது 1893 ஆம் ஆண்டுக்குப் பின்னர், ஒரு நாளில் பெய்த அதிக பட்ச மழை வீழ்ச்சியாகும் என்று இந்திய வானிலை ஆய்வு நிலையம் தெரிவித்துள்ளது. ஜூன் 1 அன்று சில்சாரில் பெய்த மழை, 132 ஆண்டு கால சாதனையான 290.3 மி.மீ. மழையை ஒரு நாளில் முறியடித்தது.

அதேநேரம், வட கிழக்கு மாநிலங்களான அசாம், மணிப்பூர், திரிபுரா, சிக்கிம், அருணாச்சலப் பிரதேசம் மற்றும் பிற மாநிலங்களில் கடந்த மூன்று நாட்களில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண் சரிவில் குறைந்தது 34 பேர் உயிரிழந்துள்ளனர். (நி-8)

# தொடரூந்து மீது இடிந்து விழுந்த பாலம்

* ✷ 7 பேர் உயிரிழப்பு
* ✷ 70 பேர் காயம்



(மொஸ்கோ)

ரஷ்யா - மொஸ்கோவிலிருந்து கிளிமோவ் நோக்கிப் பயணித்த தொடரூந்து ஒன்று வைகோனிச்ஸ்கி என்ற இடத்தில் விபத்துக்குள்ளானது.

ரஷ்யாவின் மேற்கு பிரையன்ஸ்க் பகுதியில் பாலம் இடிந்து தொடருந்தின் மீது விழுந்ததில் இவ் விபத்து நிகழ்ந்துள்ளது.

இந்த விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர். 70 பேர் படுகாய மடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விபத்துத் தொடர்பாகத் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி-8)

# பசியின் விள

# 23 லட்சம் ம

## ஐ.நா வேதனை

(ஜெனீவா)

**காசாவில் வசிக்கும் 23 லட்சம் மக்களும் பசியின் விளிம்பில் உள்ளதாகவும், மனிதனால் உருவாக்கப்பட்ட பேரழிவு எனவும் ஐக்கிய நாடுகள் சபை வேதனை தெரிவித்துள்ளது. மேலும், காஸாவை உலகின் மிகப்பெரிய பசிப்பரப்பு என்றும் அறிவித்துள்ளது.**



குழந்தைகளின் அழு குரல்கள், ஓயாமல் ஒலிக்கும் பசிக்குரல்கள்... ஒரு தாய்க்கு ஒரு துண்டு ரொட்டி கிடைத்தால், அதை குழந்தைகளுக்கு பகிர்ந்து கொடுத்து, மீதமுள்ளதை நாளைக்கு சேமிக்கிறார். காசாவில் நிலவும் பசிப்பிணியின் கொடுமைகளுக்கு இக்காட்சிகளே சாட்சி.

ஹமாஸ் மீது இஸ்ரேல் நடத்தும் தாக்குதல்களால், கடந்த மூன்று மாதங்களாக உணவு கிடைப்பதில் தட்டுப்பாடு நிலவுகிறது. குழந்தைகள் கடுமையான பசியில் பாதிக்கப்பட்டு உயிரிழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. காசாவின் வடக்கு பகுதியில் இரண்டு வயதிற்குட்பட்ட குழந்தைகளில் 16% பேர் ஊட்டச்சத்து குறைவால் பாதிக்கப்பட்டுள்ளதாக உலக

# நைஜீரியாவில் பேருந்து விபத்தில் 21 தடகள வீரர்கள் உயிரிழப்பு

(நைஜர்)

நைஜீரியாவின் ஒகுன் மாகாணத்தில் தேசிய விளையாட்டு விழாவில் பங்கேற்ற பின் கானோ நகரை நோக்கி பயணித்த தடகள வீரர்களை ஏற்றிச் சென்ற பேருந்து ஒன்று விபத்துக்குள்ளானதில்





21 தடகள வீரர்கள் உயிரிழந்துள்ளனர். இதேவேளை, சாரதிக்கு ஏற்பட்ட சோர்வு அல்லது அதிக வேகத்தின் காரணமாக குறித்த விபத்து ஏற்பட்டு இருக்கலாம் என அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை நைஜீரியாவில் கடந்த ஆண்டு மாத்திரம் 9,570 வீதி விபத்துக்களில் 5,421.பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...ளிம்பில் ...மக்கள்!



சுகாதார அமைப்பு கூறுகிறது. மருத்துவமனைகளில் குறைந்த எடை கொண்ட குழந்தைகள் மற்றும் பசிப்பிணியில் சிக்கிய குழந்தைகள் அதிகரித்து வருகின்றன.

இஸ்ரேலின் தடைகள் மற்றும் பாதுகாப்பு சிக்கல்கள், உதவித் திட்டங்களை செயற்படுத்துவதில் பெரும் முட்டுக் கட்டையாக உள்ளன. இதனால், மக்கள் தினசரி உணவுப் பொருட்கள், குறிப்பாக மா மற்றும் பிற அடிப்படை தேவைகளுக்காகப் போராடுகின்றனர்.

உணவைக் கட்டுப்படுத்தி மக்கள் மீது அழுத்தம் செலுத்தும் இஸ்ரேலின் நடவடிக்கைகள் பட்டினியின் கொடுமையை மேலும் மோசமாக்குகின்றன.

காசாவில் ஒவ்வொரு நொடியிலும் உயிரைத் தீண்டும் அபாயமாக மாறியுள்ள பசிக் கொடுமைக்கு முடிவு எப்போது? (நி-8)

# பிரான்ஸில் வெடித்த வன்முறை

## ✷2 பேர் உயிரிழப்பு ✷192 பேர் காயம்

(பாரிஸ்)

பிரான்ஸில் பாரிஸ் செயிண்ட்-ஜேர்மைன் சாம்பியன்ஸ் லீக் கொண்டாட்டத்தின் பின்னர் இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தால் இரண்டு பேர் உயிரிழந்துள்ளதோடு, 192 பேர் காயமடைந்துள்ளனர்.

ஜேர்மனியின் முனிச் நகரில், பாரிஸ் செயின்ட்-ஜேர்மைன் மற்றும் இன்டர் மிலன் அணிகளுக்கு இடையே சாம்பியன்ஸ் லீக் கால்பந்து இறுதிப் போட்டி நடந்தது. இந்தப் போட்டியில், பி.எஸ்.ஜி. அணி 5-0 என்ற புள்ளிக் கணக்கில் வெற்றி பெற்றது.

இதுவரை இல்லாத வகையில் இது மிகப் பெரிய வெற்றியாகும்.



இதனைத் தொடர்ந்து, பிரான்ஸின் பாரிஸ் நகரின் வீதிகளில் மக்கள் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர். அப்போது திடீரென வன்முறை வெடித்தது.

வன்முறையைக் கட்டுப்படுத்த, பாரிஸ் நகர் முழுவதும் 5,400 பொலிஸார் குவிக்கப்பட்டனர். பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசினர்.

இதனால் ஏற்பட்ட வன்முறையில், 192 பேர் காயம் அடைந்தனர். 264 வாகனங்கள் தீ வைத்து கொளுத்தப் பட்டன. 692 தீ வைப்பு சம்பவங்கள் நடந்துள்ளன. 560 பேர் கைது செய்யப் பட்டனர். (நி-8)

# கனடாவில் காட்டுத்தீ


## 25,000 பொது மக்கள் வெளியேற்றம்

(ஒட்டாவா)

கனடாவில் நேற்று முன் தினம் ஏற்பட்ட காட்டுத் தீப்பரவலினால் அமெரிக்காவின் சில மாநிலங்களில் காற்றின் தரம் மோசமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக 3 மாகாணங்களில் உள்ள 25,000 இற்கும் மேற்பட்ட பொது மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, அவசர நிலை அறிவிக்கப்பட்டதைத்



தொடர்ந்து கனடாவின் மானிடோபாவைச் சேர்ந்த சுமார் 17,000 பேரும் ஆல்பர்ட்டாவில் 1,300 பேரும் சஸ்காட்செவனில் சுமார் 8,000 பேரும் வெளியேற்றப்பட்டுள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (நி-8)

# அணுசக்தி ஒப்பந்தத்தில்

## கையெழுத்திடுமாறு ஈரானுக்கு நெருக்கடி



(வோஷிங்டன்)

அமெரிக்க நிர்வாகம், ஈரானுக்கு அனுப்பி வைத்துள்ள அணு சக்தி ஒப்பந்த முன்மொழிவுகளில் ஈரானை உடனடியாக கையெழுத்திடுமாறு அமெரிக்கா நெருக்கடி கொடுத்துள்ளது.

ஈரானிடம் அணு ஆயுதங்களை தயாரிப்பதற்கான யுரேனியம் அதிகளவில் உள்ளதால் இது பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. இதனால் ஈரானுடன் அணு சக்தி ஒப்பந்தம் செய்ய ட்ரம்ப் தீவிரம் காட்டி வருகிறார்.

இதேவேளை, அணு ஆயுதங்களை தயாரிக்கக் கூடாது என்றும் ஈரானின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கப்படும் என்றும், அமெரிக்காவின் புதிய ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமை முக்கிய அம்சமாகும்.

இது தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி ஈரானுக்கு தொடர்ந்து நெருக்கடி கொடுத்து வருகிறார்.

இதன் பின்னணியிலேயே, அமெரிக்காவுக்கும், ஈரானுக்கும் இடையிலான அணுசக்தி ஒப்பந்தத்திற்கான முன்மொழிவை அமெரிக்கா ஈரானுக்கு அனுப்பியுள்ளதோடு உடனடியாக அதில் கையெழுத்திடும்படி நெருக்கடி கொடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் ஆணையை மதிக்க வேண்டும்

## அமைச்சர் நளிந்த



(கொழும்பு)

எதிர்க்கட்சிகள் மக்களின் ஆணையை மதிக்க வேண்டுமென சுகாதார மற்றும் தொடர்பாடல் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு பெரும்பான்மை பலம் கிடைக்கப் பெற்றுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்கு எந்தவொரு உள்ளூராட்சி மன்றத்திலும் ஆட்சி அமைக்க மக்கள் ஆணை வழங்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி என ஓர் கட்சி கிடையாது எனவும் அவை தனித்தனியாக தங்களது கொள்கைகளை பிரசாரம் செய்து தேர்தலில் போட்டியிட்டவை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான ஓர் பின்னணியில் எவ்வாறு எதிர்க்கட்சிகள் கூட்டாக இணைந்து ஆட்சி செய்வது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

எனவே கொழும்பு மாநகரசபை உள்ளிட்ட உள்ளூராட்சி மன்றங்களில் தேசிய மக்கள் சக்திக்கு ஆட்சி அமைக்க இடமளிக்க வேண்டும் எனவும் ஆட்சி நடத்துவதற்கு எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1974- இந்து
நட்சத்திரம்: உத்தரம்
12இல் சூரி செவ்
உயரம்: 5'8"
தகைமை/தொழில் :A/L, Supervisor (Australia)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ:B/15563

பிறப்பு:1992-இந்து
நட்சத்திரம்:பரணி
2இல் செவ்
உயரம்:5'7"
தகைமை/தொழில்-Own(Shop)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15564

பிறப்பு:1992-இந்து
நட்சத்திரம்:திருவோணம்
கி-பா-18 3/4
உயரம்:5'8"
தகைமை/தொழில்:BIT,Software Engineer
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ:B/15566

பிறப்பு: 1996-இந்து
நட்சத்திரம்:மகம்
கி-பா-9 1/2
உயரம்:5'10"
தகைமை/தொழில்: BSc,London
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ:B/15567

பிறப்பு: 1995- இந்து
நட்சத்திரம்:ரேவதி
உயரம்:5'8"
தகைமை/தொழில்: HND(IT),Canada
எதிர்பார்ப்பு: PRஉள்ளவர்(Canada)
தொ.இ:B/15569

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1989-RC
நட்சத்திரம்: அனுசம்
உயரம்: 5'3"
கி-பா-19 3/4
தகைமை/தொழில்: A/L,அரச தொழில்
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: G/15580

பிறப்பு-1995-இந்து
நட்சத்திரம்- பரணி
கி-பா-51
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BSc,உணவு நிபுணர்
எதிர்பார்ப்பு: உயர்பதவி
தொ.இ: G/15584

பிறப்பு-1997-இந்து
நட்சத்திரம்- பரணி
2இல்செவ்
உயரம்-5'5"
தகைமை/தொழில்: Nurse(pvt)
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண், வெளிநாடு
தொ.இ:G/15586

பிறப்பு-1979-இந்து
நட்சத்திரம்:புனர்பூசம்
கி.பா -56
உயரம்: 5'4"
தகைமை/தொழில் -Pharmacist(pvt)
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: G/15587

பிறப்பு-1998-இந்து
நட்சத்திரம்:பூரம்
கி.பா -105
உயரம்: 5'4"
தகைமை/தொழில் -BSc,Nurse
எதிர்பார்ப்பு: UK,Canada
தொ.இ:G/15591

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 386



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## தீர்மானிக்கும் திறமை!

எனக்குத் தெரிந்த ஒரு அதிகாரி இருக்கிறார். அவருக்குக் கீழே நிறையப் பேர் வேலை பார்க்கிறார்கள். அந்த அதிகாரி அதிகமாக விபரம் தெரிந்தவர். அனுபவசாலி .அவரை ஒரு நாள் பார்க்கப் போயிருந்தேன். அவரிடம் கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்தேன். அந்தச் சமயத்திலே, அவரிடம் வேலை பார்க்கின்ற ஒருவர் ஏதோ ஒரு பிரச்சினையோடு அவரிடம் வந்தார். அவர்களின் அலுவலகம் சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சினை. இந்த பிரச்சினையை எப்படிச் சமாளிக்கலாம், இதற்கு என்ன தீர்வு? என்று இவரிடம் அவர் கேட்டுக்கொண்டிருந்தார்.

இவர் ஒரு பெரிய அதிகாரி, உடனே அந்தப் பிரச்சினைக்கு என்ன தீர்வு என்பதை அவரிடமே சொல்லி அனுப்ப வேண்டியது தானே அப்படிச் செய்யவில்லை. வந்த அவரை உட்கார வைத்து அவர் வாயாலேயே பிரச்சினையை தெளிவாக விளக்கச் சொன்னார். அதற்கு என்ன காரணமாக இருக்கும் என்பதையும் அவர் வாயாலேயே சொல்லச்சொன்னார்.இந்தப் பிரச்சினைக்கு என்னென்ன முறைகளிலே தீர்வு காணலாம் என்பதையும் அவரிடமே கேட்டார்.

அவர் கொஞ்சம் யோசித்துப் பார்த்து விட்டு ஒரு நான்கு ஐந்து தீர்வுகளைச் சொன்னார். அதிலே ஒன்றைத் தேர்ந்தெடுத்து அந்த வழியிலேயே அதைச்செய்து முடித்துவிடுங்கள் என்று அவரிடம் சொல்லி அனுப்பினார். பிரச்சினையோடு வந்தவர் அதற்கான தீர்வோடு திரும்பிப் போயிட்டார்.

இவ்வளவையும் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்த நான் இப்ப அந்த பெரிய அதிகாரியிடம் பேச ஆரம்பித்தேன்.

ஏன் சார், உங்களுக்கு கீழே வேலை பார்க்கின்ற அந்த பணியாளர், உங்களிடம் வந்தால் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தானே வருகிறார்.

நீங்கள் என்ன என்றால் அவரையே உட்காரவைத்து அந்தப் பிரச்சினைக்கு என்ன தீர்வு என்று கேட்கிறீர்களே, இதுதான் நிர்வாகமா? என்று கேட்டேன். ஆம் என்றார் அவர் அதற்குப் பிறகு விளக்கம் கொடுத்தார். நம்முடன் வேலை பார்க்கின்ற ஒருவர் பிரச்சினையோடு மட்டும் நம்மிடம் வருபவராக இருக்கக்கூடாது. அப்படி அவர் வரும் போது அதற்கான நான்கு ஐந்து தீர்வுகளையும் கொண்டு வருபவராக அவர் இருக்கவேண்டும். அந்த அளவுக்கு அவரைத் தயார்படுத்த வேண்டியது நம் பொறுப்பு. ஒரு விடயத்தை தீர்மானிக்கின்றவர் அல்லது முடிவெடுக்கின்றவர். அதாவது Decision Maker எப்படி இருக்கணும்?

வெறுமனே தீர்மானிக்கின்றவராக மட்டும் இருக்கக்கூடாது, தீர்மானிப்பதற்கு கற்றுக் கொடுப்பவராகவும் இருக்கவேண்டும். அப்படி கற்றுக் கொடுத்தால் தான் அவரின் வாழ்க்கையிலே முன்னேற முடியும். அவர்களே பிரச்சினையைப் புரிந்துகொள்வதற்கும் அதற்குச் சரியான தீர்வு கண்டுபிடிப்பதற்கும் வாய்ப்பு கொடுக்க வேண்டும்.

அப்படி கொடுத்தால் அவர்கள் வளர்ச்சிக்கு நாம் உதவுகிறோம் என்று அர்த்தம். அப்படிச் செய்யாமல் பிரச்சினையோடு வருபவர்களை உட்கார வைத்து நாம் யோசித்து முடிவு சொல்லி அனுப்பினால் அவர்களின் வளர்ச்சிக்கு நாம் தடையாக இருக்கிறோம் என்று அர்த்தம்.

இதைப் புரிந்துகொண்ட ஒரு தலைமை அதிகாரி, தனக்குக் கீழே உள்ள பணியாளர்களைப் பழக்கப்படுத்த வேண்டும். பிரச்சினைகளைக் கொண்டு வருபவர்களே அதற்கான சில தீர்வுகளையும் கொண்டு வரும் அளவிற்கு அவர்கள் சுயமாக சிந்திப்பதற்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும். அப்படி இல்லாமல் அதைத் தீர்மானிப்பதற்கு நீ யார்,இங்கே நான்தான் எல்லாம் என்று சொல்பவர் விவரம் இல்லாதவர் என்று அர்த்தம்.

முடிவெடுப்பதற்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் சுயமாக சிந்திக்கின்ற திறமை வளர வேண்டும் . பணியாளர்களுக்கு சுயமாக சிந்திக்கின்ற திறமை வளருவதற்கு மேலதிகாரிகள் ஒரு கிரியா ஊக்கியாக செயற்பட வேண்டும். அப்படி செயற்படுபவர் தான், ஒரு சிறந்த நிர்வாகி. இன்றைக்கு பல இடங்களிலே நிலைமை இப்படி இல்லை. அதனாலே தான்.

எந்த அலுவலகத்திலே போய் எந்த ஒரு சின்ன விபரம் கேட்டாலும் எனக்குத் தெரியாது மேலே உள்ள அதிகாரியைப் போய்ப் பார் என்று கையைக் காட்டிவிட்டு இருப்பார்கள்!

ஒரு அலுவலகத்திலே ஒரு கிளார்க் வந்து தன்னுடைய நாற்காலியிலே உட்கார்ந்தார். நிமிர்ந்து பார்த்தார். எதிரிலே உள்ள மேசையிலே ஒரு தேள். உற்றுப் பார்த்தார். உடனே ஒரு குச்சியை எடுத்து அடிக்க வேண்டியது தானே, அடிக்கவில்லை.

அதைவிட்டு விட்டு கடிகாரத்தைப் பார்க்க ஆரம்பித்தார். அந்தச் சமயத்திலே நான் போய்ச் சேர்ந்தேன். ஏன், தேளை அடிப்பதை விட்டுவிட்டு கடிகாரத்தைப் பார்க்கிறீர்கள் என்றேன். பத்து மணிக்கு எங்களுடைய அதிகாரி வந்துவிடுவார்.

அவரிடம் அனுமதி கேட்டுக்கொண்டு இந்தத் தேளை அடிக்கலாம் என்று பார்க்கிறேன் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அமுலில் வைப்பதே அரசின் திட்டம்!



## அருட்தந்தை மா. சத்திவேல்

(நெளுக்குளம்)

**பயங்கரவாதத் தடை சட்டத்தை தொடர்ந்தும் அமுலில் வைப்பதே அரசின் திட்டம். பயங்கரவாத தடைச் சட்டம் மீண்டும் எந்த ஒரு வடிவிலும் நடைமுறைக்கு வரக்கூடாது. அதற்கு இடம் அளிக்கவும் வேண்டாம் என வடக்கு, தெற்கு சார் அனைத்து நீதி சமூகத்தையும் கேட்டுக் கொள்கின்றோம்.**

நீதி அமைச்சரோடு நடத்திய பேச்சில் அவர்களின் நிலைப்பாடு வெளிப்படுவதாக சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார். நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழர்களைப் பொறுத்த வரையில் இலங்கையில் கொண்டுவரப்பட்ட அரசியல் யாப்புகள் மிக மிக பயங்கரம் நிறைந்தவை. 1972 மற்றும் 78 இல் தமிழர்களையும் தமிழர் இறைமையையும் ஓரம் கட்டியே அரசியல் யாப்புக்கள் கொண்டு வரப்பட்டன. அந்த அரசியல் யாப்பு நாட்டின் அமைதிக்கு எதிரானது. தமிழர்கள் எதிர் பார்க்கும் எந்த ஒரு அரசியல் தீர்வையும் அடைய இடம் அளிக்காதது. இத்தகைய யாப்பை வரைந்தவர்களும், பெரும்பான்மை பலத்தோடு அங்கீகரித்தவர்களும், தொடர்ந்து பாதுகாப்பவர்களும், மாற்றீடாக வேறொன்றை கொண்டு வருவோம் என ஏமாற்றியவர்களும் பயங்கர வாதிகளாவர். இவர்களைக் கைது செய்து சிறையில் அடைப்பதற்கு பயங்கரவாத தடைச்சட்டத்தில் இடமில்லை என்பதால் பயங்கரவாத தடைச்சட்டமும் பயங்கரவாதமே. இத்தகைய சட்டம் நாட்டில் இருக்கக் கூடாது. இதையொத்த சட்டம் மாற்று வடிவில் வரவும் கூடாது. அவ்வாறு ஒரு சட்டத்தினைக் கொண்டு வர நினைப்பவர்களும் பயங்கரவாதிகளாகவே அடையாளப் படுத்தப் படல் வேண்டும்.

தற்போதைய சர்வதேசசூழ் நிலையில் பயங்கரவாதத்திற்கு எதிராகவும் இவ்வாறான ஒரு சட்டம் நாட்டில் தேவை எனும் வாதமும் முன்வைக்கப்படுகின்றது. வல்லரசுகளாக தம்மை அடையாளப்படுத்திக் கொண்ட பயங்கரவாதிகளும் வல்லரசுகளாகத் துடிக்கும் பயங்கர வாதிகளும் அரசியல், பொருளாதார, கலாசார ரீதியில் மட்டுமல்ல தேசிய மற்றும் சர்வதேச பாதுகாப்பு என்ற போர்வையில் நாட்டுக்குள் காலூன்றியுள்ளதோடு நாட்டை துண்டு துண்டுகளாக தமதாக்கியும் கொண்டுள்ளனர். இந்நிலையில் அதற்கு எதிராகக் குரல் கொடுப்பவர்களையும் போராட்டம் செய்பவர்களையும் பயங்கர வாதியாக்கும் சட்டத்தினையே புதிய வடிவில் தற்போதைய ஆட்சியாளர்களும் கொண்டு வர முயல்வதாக தெரிகிறது. இது கடந்த கால தமது நிலைப்பாட்டுக்கும் மக்களுக்கும் எதிரான பயங்கரவாதமாகும்.

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களும் அவர்களின் அமைப்புகளும் வடக்கு, கிழக்கில் நடந்தது இன அழிப்பு மற்றும் இனப்படுகொலை என்றும் யுத்தக் குற்றங்களுக்கு நீதி கேட்டும் சர்வதேச சமூகத்திற்கு அழுத்தம் கொடுத்துக் கொண்டிருக்கையில் சில நாடுகள் அதற்கான அங்கீகாரம் கொடுத்திருக்கும் சூழ்நிலையில் இது தொடர்பில் இலங்கையில் ஆட்சியாளர்களுக்கு அழுத்தம் கொடுப்போரையும், சர்வதேச தமிழ் சமூகத்தோடு சேர்ந்து இயங்குபவர்களையும் பயங்கர வாதிகளாக்கும் புதிய சரத்தும் புதிய சட்டத்தில் உள்வாங்கப்படலாம். இது தமிழர்களுக்கு எதிரான இன்னுமொரு சுற்று இன அழிப்புக்கும் வித்திடலாம்.

தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடை சட்டத்தின் கோரப்பிடிக்குள் சிக்குண்டு இன அழிப்பிற்கும் இனப்படுகொலைக்கும் முகம் கொடுத்த சமூகமாக; புதிய பயங்கரவாத சட்ட உருவாக்கத்திற்காக உருவாக்கப்பட்டுள்ள ஆலோசனைக் குழுவையும், அவர்களால் முன்வைக்கப்படும் நகல் சட்டமூலத்தையும் எதிர்ப்பதோடு அதனை நடைமுறை படுத்த இடமளிக்காத வகையில் மக்களுக்கான தெளிவூட்டல்கள் செய்தல் வேண்டும்.

நீதி அமைச்சரோடு அவருடைய அமைச்சில் நாம் நடத்திய பேச்சுவார்த்தையின் போது அரசாங்கத்திற்கு புதிய வடிவில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை கொண்டு வரவுள்ள அவசரத்தையும், ஆர்வத்தையும் காணக்கூடியதாக இருந்தது.

நடைமுறையில் உள்ள சட்டத்தைக் கொண்டு பயங்கரவாதமாகவும் எதிர்ப்பவர்களை பயங்கரவாதிகளாகவும் சித்தரிக்கலாம். ஆனால் நாட்டின் எதிர்காலம் கருதியும் தமிழர்களின் அரசியல் நலன் கருதியும் எமது எதிர்ப்பை வெளிக்காட்ட வேண் டும்.

பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் வடக்கு கிழக்கை பிரித்தவர்கள் அதே நிலையில் தமிழர் தாயகத்தை தொடர்ந்து வைத்திருக்கவும், நாட்டை பயங்கரவாதத்தில் இருந்து பாதுகாப்பதாக கூறி " தெற்கின் எழுச்சியை அடக்கவும் எத்தனை காலம் என்பதை எத்தனிக்கலாம்" இதனை அமைதி காத்து அங்கீகரிக்காது நீதிக்கான சமூகமாக அனைத்து வடிவங்களிலும் எமது எதிர்ப்பைத் திட்டமிட்டு வெளிபடுத்த வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-299)

## வவுனியாவில் களைகட்டியது நுங்குத் திருவிழா



(வவுனியா)

வவுனியா மருக்காரம் பனையில் தமிழரின் பாரம்பரிய இசையுடன் நுங்குத் திருவிழா இடம்பெற்றது.

இதன்போது பனை மரத்தின் பயன்கள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது. பனை மரத்தின் உற்பத்திப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

மேலும் கலை நிலா கலையகத்தினால் இயற்கை உரத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி நாடக ஆற்றுகையும் இடம்பெற்றது.

சுயாதீன இளைஞர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் தமிழீழ விருட்சம் அமைப்பின் தலைவர் மற்றும் கிராம சேவகர்கள், பொதுமக்கள் மற்றும் பெருமளவான இளைஞர்கள் , யுவதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (8)

## முல்லை, கிளி மாவட்டங்களில் 79, 279 வெடிபொருட்கள் மீட்பு

### ஸார்ப் நிறுவனம் தெரிவிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் 34 இலட்சத்து 31 ஆயிரத்து 515 சதுரமீற்றர் பரப்பளவில் இருந்து 79,279 அபாயகரமான வெடிபொருட்களை அகற்றியுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்தார்.

கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டு வரும் குறித்த மனிதாபிமான நிறுவனத்தின் கடந்த மே மாதம் வரைக்குமான செயற்பாடு தொடர்பில் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில், இலங்கையின் வட பகுதியில் மனிதாபிமான கண்ணிவெடியகற்றலில் ஜப்பான் மற்றும் அமெரிக்கா நாட்டு நிதியுதவியுடன் ஈடுபடும் ஸார்ப் மனிதாபிமானக் கண்ணிவெடியகற்றும் அரசசார்பற்ற நிறுவனமானது 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2024 மே மாதம் 29 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள தச்சடம்பன், அம்பகாமம், ஒலுமடு மற்றும் மாங்குளம், கொக்காவில் பகுதியிலும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள பகுதியிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள முகமாலை, கிழாலி, இயக்கச்சி மற்றும் ஆனையிறவிலும் கண்டாவளை பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள தட்டுவன்கொட்டி பகுதியிலும் 34 இலட்சத்து 31 ஆயிரத்து 515 சதுரமீற்றர்பரப்பளவில்இருந்து 79,279 அபாயகரமான வெடிபொருட்களை அகற்றியுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்புனவ தெரிவித்தார்.

தொடர்ந்து இந்நிறுவனம் கண்ணிவெடியகற்றும் பணிகளைப் புதுக்குடியிருப்பு, அம்பகாமம், மாங்குளம் , கொக்காவில், தட்டுவன்கொட்டி, கிளாலி மற்றும் ஆனையிறவிலும் துரித கதியில் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (8-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 4

காவியத் தொடர் 789





ஆகையால் திரும்ப மதில் மேல் ஏறி அரண்மனைக்குள் இறங்குவதுதான் சரி. பெரிய பழுவேட்டரையரின் வரவேற்பு தடபுடல்களில் எப்படியாவது தப்பித்துக் கொள்ளலாம் அல்லது சுரங்கவழி இருக்கவே இருக்கிறது. மணிமேகலையிடம் மீண்டும் கொஞ்சம் கெஞ்சிப் பார்த்தால் போகிறது. இல்லாவிடில் பழுவூர் இளையராணியின் தயவையே சம்பாதித்துக் கொள்ள வேண்டியதுதான்.

இதுவரை தன்னைக் காட்டிக் கொடுக்காதவள் இப்போது மட்டும் காட்டிக் கொடுத்து விடுவாளா?

வந்தியத்தேவன் இறங்கிய வழியில் மறுபடி மேலே ஏறத் தொடங்கினான். நாய் இன்னும் உயரமாக எழும்பிக் குதித்துக் குரைத்தது. மீண்டும் சிரிப்புச் சத்தம் கேட்டது. மரத்தின் மறைவிலிருந்து ஒரு உருவம் வெளியே வந்தது அதன் கையில் ஒரு வேல் இருந்தது. அவன் தேவராளான் என்பதை வந்தியத்தேவன் தெரிந்து கொண்டான். தேவராளான் வந்தியத்தேவன் சுவரில் தொங்கிய இடத்திற்கு அருகில் வந்தான்.

"அப்பனே உன் உயிர் வெகு கெட்டி!" என்றான். அதுதான் தெரிந்திருக்கிறதே! ஏன் மறுபடியும் என்னிடம் வருகிறாய்? என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"இந்தத் தடவை நீ தப்ப முடியாது!" என்று கூறித் தேவராளன் தன் கையிலிருந்த வேலை வந்தியத்தேவனை நோக்கிக் குறி பார்த்தான்.

வந்தியத்தேவன் தன்னுடைய ஆபத்தான நிலையை உணர்ந்து கொண்டான். பாதிச் சுவரில் தொங்கிக் கொண்டிருப்பவன் கீழேயிருந்து வேலினால் குத்தப் பார்ப்பவனுடன் எப்படிச் சண்டையிட முடியும்? குதித்துத் தப்பப் பார்க்கலாம் என்றால், வேட்டை நாய் ஒன்று மேலே பாயக் காத்துக் கொண்டிருக்கிறது.

"தேவராளா, ஜாக்கிரதை! உங்கள் எஜமானி பழுவூர் ராணியின் கட்டளையை ஞாபகப்படுத்திக் கொள்! என்னை ஒன்றும் செய்ய வேண்டாம் என்று உங்களுக்கு ராணி சொல்லி இருக்கவில்லையா!"

தேவராளன் ஒரு பேய்ச் சிரிப்புச் சிரித்துவிட்டு, "பழுவூர் ராணி என் எஜமானி அல்ல! எந்த ஊர் ராணியும் என் எஜமானி அல்ல. பத்திரகாளி துர்க்கா பரமேசுவரிதான் என்னுடைய எஜமானி!" என்றான்.

"என் குலதெய்வமும் துர்க்காபரமேசுவரிதான்! அவளுடைய அருளினால்தான் நடுக்கடலில் எரிகிற கப்பலிலிருந்து தப்பித்து வந்தேன். என்னைத் தொட்டாயானால் துர்க்கை உன்னை அதம் செய்து விடுவாள்! என்றான் வந்தியத்தேவன்.

"நீ துர்க்கையின் பக்தன் என்பது உண்மையானால், இப்பொழுது எனக்கு ஒரு காரியம் செய்ய வேண்டும். அப்போதுதான் உன்னைக் கொல்லாமல் விடுவேன்!" என்றான் தேவராளன்.

"என்ன செய்ய வேண்டும்? முதலில் உன்னுடைய நாயை அப்பால் போகச் சொல்லு!"

"இந்தப் பக்கம் ஒரு வீர வைஷ்ணவன் வந்தான். அவனைத் தேடிப் பிடிப்பதற்கு நீ ஒத்தாசை செய்தால் உன்னைச் சும்மா விட்டு விடுகிறேன்."

"எதற்காக அவனைப் பிடிக்க வேண்டும்?" என்றான் வந்தியத்தேவன்.

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்

## பயிற்சி தந்த நன்மை



(நேற்றைய தொடர்ச்சி)

ரம்யாவின் பெற்றோர் நான்காவது தளத்தில் இருந்தனர். ஏழாவது தளத்திலிருந்து புகை வரவும், அங்கிருந்த அனைவரும் திடு திடுவென இறங்கி ஓடி வந்தனர்.

சத்தம் கேட்டு வெளியே வந்த ரம்யாவின் பெற்றோரும், பதற்றத்துடன் உடனே வீட்டை விட்டு ரம்யாவையும், அவள் தம்பியையும் இழுத்துக் கொண்டு கூட்டத்தோடு கூட்டமாய் ஓட தயாராகினர்.

ரம்யா சட்டென்று அம்மாவின் கையை உதறிவிட்டு அவர்கள் தளத்தில் இருந்த எல்லார் வீட்டு கதவையும் தட்டி அங்குள்ள அனைவரையும் வெளியே கூப் பிட்டாள்.

ஒருவரையும் அந்த கூட்டத்தோடு ஓட விடாமல் அவர்களை அந்த தளத்தின் முன்புறம் வர சொன்னாள். அனைவரையும் முகத்தில் துணியை கட்டிக் கொள்ள சொன்னாள்.

பின் பெருகி வரும் புகையை சுவாசிக்காத வண்ணம் தரையோடு உட்கார சொன்னாள். அதற்குள் கீழிருந்து ஆட்கள் இவர்கள் தளத்துக்கு தீயணைப்பு துறை மூலம் ஏணியை வைத்து கொடுத்தனர்.

ரம்யா முதலில் வயதானவர்களையும், அப்புறம் பெண்களையும், குட்டி குழந்தைகளுடன் கீழிறங்க சொன்னாள். அதன் பின்பு, சிறுவர்கள், பெரியவர்கள் எல்லோரையும் இறங்க வைத்தாள். ரம் யாவும் அவர்களுடன் பத்திரமாக இறங்கி னாள்.

தீ அணைக்கப்பட்டு விட்டது. இருந்தாலும், அந்த புகை பரவியதாலும், அங்கிருந்து உயிருக்கு பயந்து ஓடி வந்ததால் கீழே விழுந்து நிறைய பேருக்கு காயங்கள் ஏற்பட்டிருந்தது.

ரம்யா இருந்த தளத்தில் யாருக்கும் எந்த விதமான காயங்களோ, மூச்சு திணறலோ ஏற்படவில்லை என அங்கிருந்து வந்தவர்கள் சொன்னார்கள். ரம்யா இருந்த கீழ் தளத்தில் கூட பயத்தினால் நிறைய பேருக்கு காயங்களும், மூச்சு திணறலும் ஏற்பட்டிருந்தன. ரம்யாவால் தான் நாங்கள் எந்த காயங்களும் இல்லாமல், பதற்றப்படாமலும், இருக்கமுடிந்தது என்று அங்குள்ளவர்கள் சொன்னார்கள்.

ரம்யாவை நிறைய பத்திரிகைகள் பேட்டி கண்டன. ரம்யா எங்கள் பள்ளியில் ஒரு நாள் ஆபத்து காலங்களில் நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று பயிற்சி கொடுத்திருந்தார்கள். அதன் படி எங்கள் அருகில் இருப்பவர் களுக்கு நான் உதவ முடிந்தது.

ரம்யாவை பெற்ற அவர்கள் பெற்றோரும், படித்த பள்ளியும் இதனால் பெருமை பெற்றன. செல்வி கூட வருத்தப்பட்டாள், நான் கூட அந்த வகுப்பில் கலந்து கொள்ளாமல் போய்விட்டேனே என்று.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> முன்னேறும் சந்தர்ப்பங்கள் தாமாக வருவதில்லை; அவை உருவாக்கப்படுகின்றன.
>
> ~ ஆரிஸன் ஸ்வெட்மார்டன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வடக்கு ஆளுநருக்கு ஓர் அவசர மடல்

வட மாகாண ஆளுநர் அவர்களுக்கு அன்பு வணக்கம். பல்வேறு வேலைச்சுமைகள் உங்களைச் சூழ்ந்திருந்தாலும் நம் மக்கள் எதிர்நோக்குகின்ற ஒரு பெரும் அவலம் பற்றிப் பிரஸ்தாபிக்கவே இம்மடலை அவசரமாக எழுதுகின்றோம்.

நேற்று முன்தினம் (01) முல்லைத்தீவு மாவட்டத்தில் நான்கு உயிர்கள் நீரில் மூழ்கிப் பலியாகிப்போன சம்பவம் யாவரும் அறிந்ததே.

தரம் 10இல் கல்வி கற்கின்ற இரண்டு மாணவிகள் செல்பி எடுக்க முற்பட்ட வேளை ஆலயக் கேணியொன்றுக்குள் தவறிவிழுந்து உயிரிழந்துபோன சம்பவம் மனதை நெருடச் செய்வதாகும்.

அதேபோன்று குளத்தில் தாமரைப் பூக்களைப் பறிக்கச் சென்ற பத்து வயதுச் சிறுவனும் 25 வயது இளைஞனுமாக இரண்டு பேர் குளத்தில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

வாழ வேண்டிய நான்கு பிஞ்சுகள் ஒரு கணத்தில் நீரில் மூழ்கிப் பலியாகிப்போவதென்பது சாதாரணமான விடயமல்ல.

குறித்த உயிரிழப்புச் சம்பவங்கள் தொடர்பில் செல்பி எடுத்ததால் ஏற்பட்டதென்றும் தாமரைப் பூக்களைப் பறிப்பதற்குப் பாதுகாப்பற்ற தோணியில் சென்றதாலேயே மரணம் சம்பவித்ததாகவும் பலரும் வியாக்கியானம் செய்யலாம்.

உண்மையில் மேற்கூறிய காரண காரியங்களைக் கடந்து, உயிரிழப்புக்கான முக்கியமான காரணம் சம்பந்தப்பட்ட பிள்ளைகளுக்கு நீச்சல் தெரியாதென்பதாகும்.

உண்மை. எங்கள் பிள்ளைகளுக்கு நீச்சல் பழக்குவதில் நாம் யாருமே கவனம் செலுத்துவதில்லை.

காணி பூமியை விற்றும் பிள்ளைகளைப் படிப்பிப்போம். ஆனால் நீச்சலைக் கற்றுக் கொடுப்பதன் மூலம் பிள்ளையினதும் ஏனையவர்களதும் உயிரைப் பாதுகாக்க முடியும் என்ற உண்மையை மறந்து போய்விடுவோம். இதுதான் எங்களிடமுள்ள மிகப்பெரிய அபத்தம்.

ஆம், வெளிநாடுகளிலும் எங்கள் நாட்டின் தென்பகுதியிலும் பிள்ளைகளுக்கு நீச்சலைக் கற்றுக் கொடுப்பதில் பெற்றோர்கள் காட்டுகின்ற கருசனை மிகவும் அற்புதமானது.

அதிலும் வெளிநாடுகளில் குழந்தைப் பருவத்திலேயே நீச்சலைப் பழக்கி விடுகிறார்கள்.

அதன் காரணமாக அங்கு நீரில் மூழ்குவதால் ஏற்படுகின்ற மரணங்கள் மிக மிகக் குறைவு எனலாம்.

ஆனால் எங்கள் தமிழ் மக்கள் மத்தியில் பிள்ளைகளுக்கு நீச்சலைப் பழக்க வேண்டும் என்ற விடயம் விழிப்புணர்வற்று இருப்பது வேதனைக்குரியது.

இதுவிடயத்தில் எங்கள் பாடசாலைகளும் கல்வி நிர்வாகமும் கருசனை கொள்வதாகத் தெரியவில்லை.

ஆகையால், வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து மாணவர்களும் நீச்சல் பழக வேண்டும் என்பதை கட்டாயப்படுத்தி அதனை அமுலாக்க வேண்டும்.

இங்கு மாணவர்களும் மாணவிகளும் நீச்சல் பழகுவது கட்டாயம் என்பதை அமுலுக்குக் கொண்டு வந்தால், எதிர்காலத்தில் எத்தனையோ உயிர்களைப் பாதுகாத்த புண்ணியம் தங்களைச் சேரும்.

எனவே இதுவிடயத்தில் தாங்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது நம் தாழ்மையான கோரிக்கை.

# பயங்கரவாதத் தடைச்சட்டமும் வேண்டாம் பயங்கரவாத பதிலீட்டுச் சட்டமும் வேண்டாம்

## 240 சிவில் செயற்பாட்டாளர்கள் கூட்டாகக் கோரிக்கை

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடனடியாக நீக்கும் அதேவேளை, அதனைப் பிறிதொரு சட்டத்தின் ஊடாகப் பதிலீடு செய்யவேண்டாம் என 240 சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் நீதியமைச்சிடம் வலியுறுத்தியுள்ளனர்.

இதுகுறித்து சிவில் சமூக செயற்பாட்டாளர்களால் நீதியமைச்சிடம் கையளிக்கப்பட்ட கூட்டு அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது, புதியதொரு பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தை உருவாக்குவதற்கான அரசாங்கத்தின் தீர்மானம் குறித்து நாம் மிகுந்த கவலையும், ஏமாற்றமும் அடைகின்றோம்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக நீக்குவதாகத் தேர்தல் பிரசாரத்தின்போது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வாக்குறுதியளித்திருந்தது.

அச்சட்டத்தினைப் போன்ற மிகமோசமானதும் அடக்குமுறைகளுக்கு வழிவகுக்கக்கூடியதுமான சட்டங்கள் தமது அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படாது எனும் வெளிப்படையான பொறுப்பேற்பு இருந்தது.

அவ்வாறிருக்கையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் அவசியம் தொடர்பான பகிரங்க அறிக்கைகள் மற்றும் புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் குறித்துப் பரிசீலிப்பதற்கென பிரத்தியேகக் குழு நியமனம் என்பன பொதுமக்களுக்கு அளித்த வாக்குறுதியை மீறுகின்ற நடவடிக்கைகளாகும்.

இச்சட்டம் எப்போதும் அரசின் அதிகாரத்துவம் சார் நலன்களைப் பாதுகாப்பதற்காகப் பிரயோகிக்கப்பட்டதே தவிர, மக்களின் நலனுக்காகப் பயன்படுத்தப்படவில்லை என்பதையே கடந்தகால அனுபவங்கள் வெளிப்படுத்துகின்றன.

இவ்வாறானதொரு பின்னணியில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முழுமையாக நீக்குவதுடன் அது நீக்கப்படும் வரை அச்சட்டத்தைப் பிரயோகிப்பதற்கு இடைக்காலத்தடை விதிக்கப்படவேண்டும்.

அதே போன்று அச்சட்டத்தைப் பதிலீடு செய்வதற்குப் புதியதொரு சட்டத்தை உருவாக்க வேண்டிய அவசியம் இல்லை.

அத்தோடு நடமாடுதல், கூட்டங்களை நடத்துதல், ஒன்றுகூடுதல், பேரணி, ஊர்வலம் அல்லது போராட்டம் மூலம் கோரிக்கைகளை முன்வைத்தல் என்பவற்றுக்கான சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் பொலிஸ் அல்லது ஜனாதிபதிக்கு (நிறைவேற்றதிகாரத்துக்கு) அதிகாரங்களை வழங்கக் கூடிய சட்டங்களை இயற்றக்கூடாது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள சகலருக்குமான நீதி பெற்றுக் கொடுக்கப்படுவதை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அச்சட்டத்தின்கீழ் தடுத்துவைக்கப்பட்டு குற்றவாளிகளாகத் தீர்ப்பளிக்கப்படாதவர்களுக்கு அரசினால் இழப்பீடு வழங்கப்படவேண்டும் என அக்கூட்டறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ம-7)

## கற்றாழை கடத்த முற்பட்டவேளை கடற்படை அதிகாரி மடக்கிப்பிடிப்பு

### புங்குடுதீவில் சம்பவம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு கிழக்குப் பிரதேசத்திலிருந்து சட்ட விரோதமான முறையில் சில நபர்களை வேலைக்கு அமர்த்தி சுமார் 500 கிலோகிராம் எடையுள்ள கற்றாழைக் கன்றுகளை அடியோடு பிடுங்கி தென்னிலங்கைப் பிரதேசத்திற்குக் கடத்த முற்பட்ட புங்குடுதீவு கடற்படை முகாமில் கடமையாற்றும் அதிகாரி ஒருவர் கிராமசேவகர் மற்றும் இளைஞர்களின் முயற்சியால் கையுங்களவுமாக மடக்கிப்பிடிக்கப்பட்டு குறிகாட்டுவான் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

மடக்கிப் பிடிக்கப்பட்ட சமயத்தில் குறித்த கடற்படை அதிகாரி பொதுமகன் போன்று சாதாரண உடையில் இருந்ததாகவும் இரண்டு வாரங்களுக்கு முன்பும் இதே நபர் சட்ட விரோதமாக தொகையான கற்றாழைகளைப் பிடுங்கி கடத்திச் சென்றிருந்ததாகப் பொது மக்கள் தெரிவித்தனர். (ம-க-7)

## பாலியாற்றுத் திட்டம் கைவிடப்படமாட்டாது

### அமைச்சர் சந்திரசேகர் உறுதி

யாழ்ப்பாண மக்களின் குடிநீர் தேவைக்காக மேற்கொள்ளப்பட்ட திட்டங்களில் ஒன்றான பாலி ஆற்றுத் திட்டத்தினை எமது அரசாங்கம் இடைநிறுத்தவில்லை. குறித்த திட்டத்தினை மேற்கொள்வதற்கு வன வளத் திணைக்களமும் இடையூறாக அமையாது எனக் கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த அரசாங்கங்களில் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்கள் பல அரசியல் நோக்கங்கள் கருதி ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களாகப் பார்க்கப்படுகின்ற நிலையில் பாலி ஆற்றுத் திட்டம் மக்களுக்கு நன்மை பயக்கும் திட்டமாகையால், அதனை எமது அரசாங்கம் முன்னோக்கி கொண்டு செல்லும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் நடமாடும் சேவை

(கிளிநொச்சி)

பெண்கள் வாழ்வுரிமைச் சங்கத்தின் அனுசரணையுடன் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலகம் இணைந்து நடாத்தும் நடமாடும் சேவையானது எதிர்வரும் வியாழக்கிழமை (05) காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை பச்சிலைப் பள்ளி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடாத்தப்படவுள்ளது.

இச்சேவையூடாக பதியப்படாத பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகளை மேற்கொண்டு சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் முதியோர் அடையாள அட்டை சம்பந்தமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

இச்சந்தர்ப்பத்தைத் தவறவிடாது அனைத்து மக்களையும் இந்நடமாடும் சேவை மூலம் பயன்பெறுமாறும் பச்சிலைப் பள்ளி பிரதேச சபை செயலாளர் அறிவித்துள்ளார். (ம-7)

## பாணந்துறையில் துப்பாக்கிச்சூடு

(பாணந்துறை)

பாணந்துறை, வலான பகுதியிலுள்ள ஒரு வீட்டிற்கு அருகில் நேற்று (02) காலை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

உந்துருளியில் வந்த அடையாளம் தெரியாத இருவரால் நபரொருவரை இலக்கு வைத்து இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆனால் துப்பாக்கி உரிய முறையில் செயற்படாததால் அந்தக் கொலை முயற்சி தோல்வியடைந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்ததோடு சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகளும் துரித கதியில் முடுக்கிவிடப்பட்டுள்ளன. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனி மாத இராசி பலன்கள்-2025

## குழப்பங்கள் நீங்கி மனதில் தெளிவு உண்டாகும்!



**கிரகநிலை** - ராசியில் குரு - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் சந்திரன், செவ்வாய் - தைரிய வீரிய ஸ்தானத்தில் கேது - பாக்கிய ஸ்தானத்தில் சனி, ராகு - லாப ஸ்தானத்தில் சுக்கிரன் - அயன சயன போக ஸ்தானத்தில் சூரியன், புதன் என வலம் வருகிறார்கள்

**கிரகமாற்றங்கள்:** 02.06. 2025 அன்று புதன் பகவான் அயன சயன போக ஸ்தானத்தில் இருந்து இராசிக்கு மாறுகிறார். 08.06.2025 அன்று செவ்வாய் பகவான் தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் இருந்து தைரிய வீரிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 14.06.2025 அன்று சூரிய பகவான் அயன சயன போக ஸ்தானத்தில் இருந்து இராசிக்கு மாறுகிறார். 22.06. 2025 அன்று புதன் பகவான் இராசியில் இருந்து தன வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 29.06. 2025 அன்று சுக்கிர பகவான் லாப ஸ்தானத்தில் இருந்து அயன சயன போக ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** நல்லவர், கெட்டவர் என்று பாராமல் எல்லோரிடமும் அன்பாக நடந்து கொண்டு அவர்களை நன்கு பயன்படுத்திக் காரிய வெற்றி பெறும் திறமையுள்ள மிதுன இராசியினரே, நீங்கள் விவேகத்துடன் முடிவெடுப்பதில் சிறந்தவர். இந்த மாதம் முயற்சிகளில் எதிர்பார்த்த பலன் கிடைக்கும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும்.

தொழில் வியாபாரத்தில் நீங்கள் எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு இடமாற்றம் உண்டாகலாம். உழைப்பு அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த அளவு வேகம் இருக்கும். பணவரத்து தாமதப்படலாம் ஓடர்கள் தொடர்பாக நீங்கள் அலையும் அலைச்சல் வெற்றி தரும். பங்குதாரர்களுடன் இருந்து வந்த பிரச்சினைகள் அகலும். அரசாங்க அனுகூலம் கிடைக்கும்.

குடும்பத்தில் இருப்பவர்களின் வீண் பேச்சால் மனவருத்தம் உண்டாகலாம். கணவன், மனைவிக்கிடையே திடீர் கருத்து வேற்றுமை ஏற்படலாம் வீண் பிரச்சினைகளில் தலையிடாமல் ஒதுங்கிச் செல்வது நன்மை தரும். உறவினர், நண்பர்களிடம் பழகும்போது கவனம் தேவை. பெண்களுக்கு குழப்பங்கள் நீங்கி மனதில் தெளிவு உண்டாகும். எதையும் ஒரு முறைக்கு இருமுறை யோசித்து செய்வது நல்லது. கலைத்துறையினருக்கு காரிய வெற்றிக்கு தேவையான உதவிகள் கிடைக்கும். எதிர்பாராத செலவு உண்டாகும். சொத்து மனை சம்பந்தமான காரியங்களில் தடை, தாமதம் ஏற்படலாம். வீண்பயம் ஏற்படும். ஏற்கனவே செய்த காரியங்களுக்கான பலனை அடைய வேண்டி




இருக்கும். அரசியல் துறையினருக்கு வீண் வழக்கு விவகாரங்கள் வரலாம் எச்சரிக்கையாக செயற்படுவது நல்லது. வெளிநாட்டுப் பயண வாய்ப்புகள் வரலாம். சிலர் வெளியூர் பயணம் செல்வார்கள்.

எதிர்பாலினத்தாருடன் பழகும் போது கவனம் தேவை. மனதில் தெம்பு உண்டாகும். மகிழ்ச்சி அதிகரிக்கும். மாணவர்களுக்கு முயற்சிகளில் எதிர்பார்த்த பலன் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். கூடுதல் மதிப்பெண் பெற அதிக நேரம் படிப்பது நல்லது.

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள்:** இந்த மாதம் தொழில், வியாபாரத்தில் மாற்றலாமா என்ற எண்ணம் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு இடமாற்றம், பதவி, உயர்வு கிடைக்கப் பெறுவார்கள். தொழில், வியாபாரத்தில் வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். வாகனங்கள் மூலம் லாபம் கிடைக்கும். பொருட்களை வெளியூர்களுக்கு அனுப்பும்போது கவனம் தேவை.

**திருவாதிரை:** இந்த மாதம் கணவன், மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்து வேற்றுமை குறையும். உங்களைப் பற்றி யாராவது வீண் அவதூறு பேசினால் கண்டு கொள்ளாமல் ஒதுங்கி விடுவது நல்லது. விருந்து, கேளிக்கை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சுவையான உணவை உண்பீர்கள்.

**புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்** இந்த மாதம் எந்த ஒரு வேலையையும் மனத் திருப்தியுடன் செய்வீர்கள். சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரிய வெற்றி உண்டாகும். பணவரத்து கூடும். கடுமையான முயற்சிகள் மேற்கொள்வது குறையும். வீண் வாக்கு வாதங்களைத் தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவு உண்டாகும்.

**பரிகாரம்:** புதன்கிழமையில் பெருமாளுக்கு துளசி மாலை அணிவித்து தீபம் ஏற்றி அர்ச்சனை செய்து வணங்குவது வாழ்க்கையில் முன்னேற்றத்தை தரும்.

**அதிஷ்ட கிழமைகள்:** புதன், சுக்கிரன். **சந்திராஷ்டம தினங்கள்:** 14, 15, 16.

**அதிஷ்ட தினங்கள்:** 25, 26

## எடுத்த காரியங்களில் வெற்றி கிட்டும்!



**கிரகநிலை** - இராசியில் சந்திரன், செவ்வாய் - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் கேது - அஷ்டம ஸ்தானத்தில் சனி, ராகு - தொழில் ஸ்தானத்தில் சுக்கிரன் - லாப ஸ்தானத்தில் சூரியன், புதன் - அயன சயன போக ஸ்தானத்தில் குரு என வலம் வருகிறார்கள்

**கிரகமாற்றங்கள்:** 02.06. 2025 அன்று புதன் பகவான் லாப ஸ்தானத்தில் இருந்து அயன சயன போக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 08. 06. 2025 அன்று செவ்வாய் பகவான் இராசியில் இருந்து தன வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 14. 06. 2025. அன்று சூரிய பகவான் லாப ஸ்தானத்தில் இருந்து அயன சயன போக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 22. 06. 2025 அன்று புதன் பகவான் அயன சயன போக ஸ்தானத்தில் இருந்து இராசிக்கு மாறுகிறார். 29.06. 2025 அன்று சுக்கிர பகவான் தொழில் ஸ்தானத்தில் இருந்து லாப ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** எந்த ஒரு விடயத்தையும் அது எப்படி நடக்கும் சாதகமா பாதகமா என்று முன்கூட்டியே யூகித்து அதற்கு ஏற்ப நடந்து கொள்ளும் திறமையுடைய கடக இராசியினரே! நீங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கு மதிப்பளிப்பவர். இந்த மாதம் வீண் செலவுகள் குறையும் எந்த ஒரு வேலையை செய்து முடிப்பதிலும் இருந்த தடை, தாமதம் நீங்கும். வீண் விவகாரங்களில் தலையிடுவதையும் மற்றவர்களுக்காக வாதாடுவதையும் தவிர்ப்பது நல்லது. மன திருப்தி உண்டாகும்.

தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு புதிய ஓடர்கள் பெறுவதில் இருந்த தாமதம் நீங்கும். வரவு இருந்த போதிலும் வியாபாரம் தொடர்பாக திடீர் முதலீடு செலவு உண்டாகலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மிகவும் கவனத்துடன் இருப்பது நல்லது. உறவினர்கள், நண்பர்கள் உதவியாக இருப்பார்கள்.

குடும்பத்தில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. வாழ்க்கை துணையின் உடல்நலத்தில் கவனம் தேவை. பிள்ளைகளுக்காக அலைய வேண்டி இருக்கும். மகிழ்ச்சி உண்டாகும். பெண்கள் அடுத்தவர்கள் பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சிகளை மேற்கொள்வதை தவிர்ப்பது நல்லது. தேவையற்ற செலவு ஏற்படலாம். எதிலும் கவனமாக இருப்பது நல்லது.

கலைத்துறையினருக்கு முயற்சிகள் சாதகமான பலன் தரும். பணவரத்து அதிகரிக்கும். தொழில் தொடர்பான காரியங்களை யோசித்துச் செய்வது நல்ல பலன் தரும். வீண் கவலை ஏற்பட்டு நீங்கும். பணவரத்து திருப்தி தரும். புத்திசாதூரியத்தால் எல்லாவற்றையும் சமாளித்து வெற்றி காண்பீர்கள்.

அரசியல் துறையினர் மேலிடம் நீங்கள் சொல்வதைக் கேட்டு நடக்கவில்லையே என்ற எண்ணம் ஏற்பட்டு




நீங்கும். வழக்குகளில் சாதகமான நிலை காணப்படும். நீங்கள் மற்றவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுவதில் தயங்க மாட்டீர்கள். பேச்சுத் திறமை அதிகரிக்கும்.

மாணவர்களுக்கு ஆசிரியர்களின் உதவியுடன் பாடங்களைச் சந்தேகம் நீக்கி தெளிவாக படிப்பது நல்லது. மனதில் உற்சாகம் உண்டாகும்.

**புனர்பூசம் 4ஆம் பாதம்:** இந்த மாதம் உடற்சோர்வு உண்டாகலாம். பூர்வீகச் சொத்துக்கள் மூலம் வரும் வருமானம் தாமதப்படும். திருமணம் தொடர்பான முயற்சிகளில் சாதகமான நிலை இருக்கும். தொழில், வியாபாரம் தொடர்பான காரியங்களில் எதிர்பாராத தடை ஏற்பட்டு நீங்கும். பணவரத்து அதிகரிக்கும். எதிர்பார்த்த பண உதவி வந்து சேரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளை அனுசரித்து செல்வது நல்லது.

**பூசம்:** இந்த மாதம் அலுவலகம் தொடர்பான பணிகள் தாமதப்படும். எதிலும் கவனம் தேவை. குடும்பத்தில் இருப்பவர்களுடன் வீண் வாக்கு வாதங்களைத் தவிர்த்து சாதாரணமாக பேசுவது நல்லது. வாழ்க்கைத் துணையுடன் இருந்த மனஸ்தாபங்கள் விலகும். நண்பர்கள், உறவினர்கள் வருகை இருக்கும். பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**ஆயிலியம்:** இந்த மாதம் வீண் வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. கடும் முயற்சிகள் பலன் தரும். செலவு அதிகரிக்கும். சாதகமான சூழ்நிலை காணப்படும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் உண்டாகும். விட்டுச் சென்ற நண்பர் மீண்டும் வந்து சேர்வர். அதனால் மகிழ்ச்சி உண்டாகும்.

**பரிகாரம்:** திங்கட்கிழமையில் ஆதிபராசக்தியை வழிபடுவது காரியத் தடைகளை நீக்கும். மன அமைதியைத் தரும்.

**அதிஷ்ட கிழமைகள்:** சந்திரன், சுக்கிரன்.

**சந்திராஷ்டம தினங்கள்:** 17, 18. **அதிஷ்ட தினங்கள்:** 1, 27, 28, 29

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுகாதார...

அமைச்சினால் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கொவிட் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

எனினும் மக்கள் உரிய சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றவேண்டியது அவசியம் என சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

சுகாதார அமைச்சில் நேற்றுத் திங்கட்கிழமை (02) ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாட்டில் அதிகரித்துள்ள கொவிட் நிலைமைகள் தொடர்பில் சுகாதார அமைச்சினால் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

டெங்கு, சிக்கன்குனியா மற்றும் கொவிட் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. தொற்று நோய் தடுப்புப் பிரிவுடன், மருத்துவ ஆராய்ச்சி ஸ்தாபனம் இணைந்து இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன.

இவை தொடர்பான தரவுகளை நாளாந்தம் சுகாதார அமைச்சின் ஊடாக ஊடகங்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மக்களின் சுகாதாரப் பாதுகாப்பிற்காக எடுக்க வேண்டிய சகல நடவடிக்கைகளையும் தாமதமின்றி முன்னெடுப்போம் என்றார். (ம-7)

## தாயகம்...

குப் பின்னர் யாழ்ப்பாணம் திரும்பியவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

தமிழகத்தின் அகதி முகாமில் பல தசாப்தங்களாக தஞ்சமடைந்திருந்த 75 வயதுடைய சின்னையா சிறிலோகநாதன் என்பவர் மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பியவேளை குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் பலாலியில் வைத்து அண்மையில் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட அவர் மல்லாகம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

பின்னர் அவர் தொடர்பான வழக்கானது நேற்று மல்லாகம் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் அவருக்கு பிணை வழங்கப்பட்டதாக அவரது உறவினர்களும் பாராளுமன்ற உறுப்பினர் கருணைநாதன் இளங்குமரனும் தெரிவித்தனர். (ம-7,104)

## மனிதப் புதைகுழி...

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற நீதவானிடம் விண்ணப்பத்தை முன்வைக்க சட்டத்தரணிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

செம்மணி - சித்துபாத்தி இந்து மயானப் பகுதியில் ஏழு மனித மண்டையோடு உள்ளிட்ட சடலங்களின் பாகங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளது.

குறித்த பகுதியை யாழ்ப்பாண நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா பார்வையிட்டார்.

இந்நிலையில் இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த சட்டத்தரணி வீ.எஸ்.நிரஞ்சன், மூன்று மனித மண்டையோடுகளுக்கு மேல் ஒரு பகுதியில் அடையாளம் காணப்பட்டால் மனிதப் புதைகுழி என அதனைப் பிரகடனப்படுத்த முடியும் என்ற நிபந்தனைக்கமைய குறித்த பகுதியை மனிதப் புதைகுழியாக பிரகடனப்படுத்துமாறு கோரி யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற நீதவானிடம் விண்ணப்பத்தை முன்வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார். (ம-7,33)

## 5 மண்டையோடு...

செம்மணி - சித்துபாத்தி மயானத்தில், அபிவிருத்திப் பணிகளுக்காக நல்லூர் பிரதேச சபையால் கடந்த பெப்ரவரி மாதம் குழிகள் வெட்டப்பட்டபோது, மனிதச் சிதிலங்கள் பல மீட்கப்பட்டிருந்தன.

அந்த மனிதச் சிதிலங்கள் 1995, 1996ஆம் ஆண்டுகளில் செம்மணியில் படுகொலை செய்யப்பட்ட தமிழர்களுடையதாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டது.

முறைப்பாட்டின் பிரகாரம் பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவான் மேற்கொண்ட ஆய்வுப் பணிகளைத் தொடர்ந்து, அகழ்வுப் பணிகள் கடந்த மே மாதம் 15ஆம் திகதி ஆரம்பமானது.

இரண்டாம் நாளான 16ஆம் திகதி அகழ்வின்போது முழுமையான என்புத்தொகுதிக்கு மேலதிகமாக, மண்டையோடு ஒன்றும், கை எலும்பு ஒன்றும் மீட்கப்பட்டன. இவை அனைத்தும் அகழ்வு செய்யப்படும் பகுதியின் வெவ்வேறு இடங்களில் இருந்து மீட்கப்பட்டதால், அந்த இடம் மனிதப் புதைகுழியாக இருக்கலாம் என்ற அச்சம் வெளியிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் 17ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் பெய்த மழை காரணமாக அகழ்வுப் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தன.

இந்நிலையில் நேற்று திங்கட்கிழமை மீள அகழ்வுப் பணிகள் ஆரம்பமானபோது, ஏற்கெனவே அகழ்வுப் பணிகள் இடம்பெற்ற பகுதிகளில் வெள்ள நீர் தேங்கி அப்பகுதி சகதியாக காணப்பட்டமையால், பிறிதொரு பகுதியில் அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

அதன் போது, ஐந்து மண்டையோடுகளுடன் எலும்புக்கூட்டு எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதுவரையிலான அகழ்வுப் பணிகளில் 7 மனித மண்டையோடுகள் மீட்கப்பட்டுள்ளதுடன், எலும்புக்கூட்டு எச்சங்களும் மீட்கப்பட்டுள்ளன. (ம-7,33)

## வடக்...

சாய் முரளி ஆராய்ந்தார்.

வடக்கு மாகாண பிரதம செயலாளராக புதிதாகப் பொறுப்பேற்ற தனுஜா முருகேசனை யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதர் சாய் முரளி உள்ளிட்ட துணைத் தூதரக அதிகாரிகள் சந்தித்துக் கலந்துரையாடினர்.

கைதடியில் அமைந்துள்ள வடக்கு மாகாண சபை செயலகத்தில் நேற்று குறித்த சந்திப்பு நடைபெற்றது.

குறித்த சந்திப்பில் இந்தியாவின் ஆதரவுடன் நடைபெறும் வீடமைப்பு, எரிசக்தி, சுகாதாரம், கல்வி மற்றும் வாழ்வாதாரத் திட்டங்களை அவர்கள் பரிசீலித்ததுடன் வர்த்தகம், வணிகம் மற்றும் திறனறிவு மேம்பாடு ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை விரிவுபடுத்தும் வழிகளையும் கலந்துரையாடினர்.

நடந்து கொண்டிருக்கும் திட்டங்களைச் சீராக செயற்படுத்துவதற்கும் வடக்கு மாகாணத்தின் வளர்ச்சி முன்னுரிமைகளுக்கான புதிய துறைகளை ஆராயும் பணி குறித்த செயற்பாடுகளையும் இரு தரப்பினரும் உறுதிப்படுத்தினர். (ம-7,33)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

### மஹஜன சம்பத
திகதி 2025.06.02
சீட்டிழுப்பு இலக்கம் 5848
ஆங்கில எழுத்து J; வெற்றி இலக்கங்கள் 7 9 7 9 0 8

அத சம்பத: J 7 9 0 8; சீட்டிழுப்பு இலக்கம் 0423

### தன நிதானய
திகதி - 2025.06.02
சீட்டிழுப்பு இலக்கம் - 1878
H 41 48 55 76 H
Double Chance 65549

### மெகா பவர்
திகதி 02/06/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2196
E 09 39 52 70 73

### ஜய
திகதி 2025.06.02
சீட்டிழுப்பு இலக்கம் 116
ஆங்கில எழுத்து K; வெற்றி இலக்கங்கள் 1 6 4 8

### கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4090
சீட்டிழுப்பு திகதி 02.06.2025
ஆங்கில எழுத்து K; வெற்றி இலக்கங்கள் 32 44 74 75
K

### ஹந்தஹன
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.06.02
சீட்டிழுப்பு இலக்கம் 1157
கன்னி 11 19 33 46 கன்னி
தன யோக இலக்கம் 83591; நாளுக்கான விதி எண் 18

### உத்தியோகபூர்வ முடிவுகள் — லக்கின வாசனா
02.06.2025; வெற்றி வாரம் 556
ஆங்கில எழுத்து H; மற்றும் வெற்றி இலக்கம் 4 2 6 1 9 8
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,397,019.20
82176

### சுப்பர் போல்
சீட்டிழுப்பு வாரம் 2822
சீட்டிழுப்பு திகதி 2025.06.02; தினம் திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள் 03 05 11 37 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.65,739,637.60

### சனிதா
திகதி 02.06.2025; வெற்றி வாரம் 4983
31 36 49 52 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 65,856,384.80
ரூ. 50,000/- பணப்பரிசு 84871

### ஜயோதா
திகதி 2025.06.02; வெற்றி வாரம் 2131
07 18 42 56 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 29,639,050.80

### ராசி
சீட்டிழுப்பு வாரம் 4534
சீட்டிழுப்பு திகதி 02.06.2025; தினம் திங்கட்கிழமை
08 09 38 56 சிம்மம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.7,075,017.20
174889

### கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
W 08 47 63 69 70
சீட்டிழுப்பு வாரம் 1998; திகதி 02.06.2025; திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.576,839,414.40

### அத கோடிபதி
திங்கட்கிழமை
வெற்றி வாரம்: 2648
சீட்டிழுப்பு திகதி: 2025.06.02
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.59,478,823.20
21 22 39 54 Y
ரூ.100,000/- பணப் பரிசுகளுக்கான விசேட இலக்கங்கள் 669595

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னணி...

தமிழ் தேசிய மக்கள் முன்னணி சார்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் சார்பில் அதன் செயலாளர் நாகலிங்கம் இரட்ணலிங்கமும் கையொப்பமிட்டனர்.

ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி சார்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் மற்றும் ந.சிறீகாந்தா, பொ.ஐங்கரநேசன், எம்.கே.சிவாஜிலிங்கம், ஈ.சரவணபவன், க.அருந்தவபாலன், க.நாவலன், தர்மலிங்கம் சித்தார்த்தன், கோவிந்தன் கருணாகரம், சுரேஸ் பிரேமச்சந்திரன், முருகேசு சந்திரகுமார், நாகலிங்கம் இரட்ணலிங்கம், பா.கஜதீபன், க.சர்வேஸ்வரா உள்ளிட்டோரும் கலந்து கொண்டிருந்தனர்.

உள்ளூராட்சி நிறுவனங்களின் உத்தியோகபூர்வ பதவிக்காலம் ஆரம்பமாகியுள்ள நிலையில் வடக்கில் பெரும்பாலான சபைகளில் ஆட்சி அமைப்பதில் தமிழ் கட்சிகளிடையே இழுபறி நிலை காணப்பட்டது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி ஆகிய தரப்புக்களிடையே தொடர்ச்சியாக நடைபெற்ற சந்திப்புக்களைத் தொடர்ந்து ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இவ்வாறு கைச்சாத்தான ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

சுதந்திர இலங்கைத் தீவில் கடந்த 77 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழர் தேசம் தனது அரசியல் அபிலாசைகளை திருப்திப்படுத்தும் விதத்திலும் தன்னுடைய தனித்துவம், பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கிலும் வடக்கு - கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய தனது மரபுவழித் தாயகத்தில் ஒரு தனியான தேசம் என்ற அடிப்படையில், தனது பிறப்புரிமையான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தனது விவகாரங்களைத் தானே கையாளக்கூடிய விதத்திலும் தனது சுதந்திரத்தை நிலைநிறுத்தும் வகையிலும் பூரண பொறுப்புவாய்ந்த ஒரு சுயாட்சி அரசியல் ஆட்சி முறையைப் பெற்றுக் கொள்வதற்கு உரித்துடையது என்ற யதார்த்தத்தின் அடிப்படையிலும் இந்த இலக்கினை அடைவதற்கு தமிழ்த் தேசத்தினால் தொடர்ந்து நிராகரிக்கப்பட்டு வந்திருக்கும் ஒற்றையாட்சி எனப்படும் அரசியல் ஆட்சி முறையின் எந்தவொரு ஏற்பாட்டின் கீழும் அறவே இடமில்லை என்பதுடன் பூரண சுயாட்சி அதிகாரம் கொண்ட அரசு ஒன்றினை தமிழ்த் தேசத்தின் மரபுவழித் தாயகத்தில் இலங்கைத் தீவு என்ற யாதார்த்த ரீதியான வரையறைக்குள் ஏற்படுத்துவதற்கு ஒற்றுமையாகவும் உறுதியாகவும் பாடுபட நாம் தீர்மானித்துள்ளோம் என்பதையும் பிரகடனப்படுத்துகின்றோம்.

இலங்கைத் தீவில் இனப்பிரச்சினைக்கு நிலையானதும் நீதியானதுமான அரசியல் தீர்வு என்பது ஒரு புதிய அரசியல் சாசனத்தை திட்டவட்டமானதும் தெளிவானதுமான முறையில் உள்ளடக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்படுவதற்கு ஏதுவாக தமிழ்த் தேசத்தின் அரசியல் ஒற்றுமையை தமிழ்த் தேசிய சக்திகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கில் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழ்த் தேசியப் பேரவைக்கும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணிக்கும் இடையில் பின்வரும் அம்சங்களை உள்ளடக்கி ஏற்படுத்தப்படுகின்றது.

1. தமிழ் மக்களின் பிறப்புரிமையான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலும் தமிழ்த் தேசத்தின் இறைமையின் பாற்பட்டும் வடக்கு-கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய மரபுவழித் தாயகத்தில் ஒரு பூரணமான சம்ஷ்டி ஆட்சி முறை அரசியல் சாசன ரீதியாக ஏற்படுத்தப்படுவதே தமிழ்த் தேசத்தின் இறைமையை ஏற்பதாகவும் தியாகம் செறிந்ததுமான நீண்ட விடுதலைப் போராட்டத்தின் அர்த்தமுள்ள அங்கீகாரமாகவும் இருக்க முடியும் என்பதை நாங்கள் வலியுறுத்தி நிற்கின்றோம்.

மேலும் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட எமது முஸ்லிம் சகோதரர்களின் உரிமைகளையும் அபிலாசைகளையும் நிலைநிறுத்தும் விதத்தில் அரசியல் சாசன ரீதியானவையும் வலுவானவையுமான அரசியல் நிர்வாக ஏற்பாடுகள் முஸ்லிம் சமூகத்தின் சம்மதத்துடனும் இணக்கப்பாட்டுடனும் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதையும் நாங்கள் வலியுறுத்துகின்றோம்.

2. அரசியல் யாப்பிற்கான 13 ஆவது திருத்தம் என்பது த்மிழ்த் தேசிய இனப் பிரச்சினைக்கான முழுமையானதோ இறுதியானதோ தீர்வு அல்ல என்பதனைச் சுட்டிக் காட்டுகின்றோம்.

3. கடந்த 2015 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த அரசாங்கத்தின் அரசியல் நிர்ணய சபையினால் உருவாக்கப்பட்ட அரசியல் சாசன வரைபு என்பது ஒற்றையாட்சிக்குட்பட்டது என்ற காரணத்தால் தமிழ்த் தேசத்தின் சுயாட்சிக்கு இடமளிக்கப்படவில்லை என்ற அடிப்படையில் அதனை நாங்கள் ஏற்கனவே நிராகரித்துள்ளோம் என்பதனை இருதரப்பினரும் வெளிப்படுத்துகின்றோம்.

4. போரின் போதும் அதற்குப் பின்னும் இழைக்கப்பட்ட மற்றும் இழைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இனப்படுகொலை யுத்தக் குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கெதிரான குற்றங்கள் தொடர்பில் உள்ளகப் பொறிமுறைகளை முழுமையாக நிராகரித்துச் சர்வதேசக் குற்றவியல் விசாரணை ஒன்று அவசியமானது என்பதனை இரு தரப்பினரும் வெளிப்படுத்துகின்றோம்.

5. இந்த இலட்சியப் பயணத்தில் தமிழ் தேசத்தின் நலனை விரும்பும் சகல தமிழ்த் தேசிய சக்திகளும் நேர்மையாகவும் விரைவாகவும் இணைத்துக் கொள்ளப்படுவதற்குச் சாத்தியமான சகல முயற்சிகளும் எடுக்கப்படவேண்டும் என்பதையும் நாம் வலியுறுத்துகின்றோம்.

6. இந்த அடிப்படையில் பிரதிநிதித்துவ ஆட்சி முறை ஒன்றின் கீழ் கிடைக்கும் சகல சந்தர்ப்பங்களையும் வாய்ப்புகளையும் தமிழ்த் தேசியம் சார்ந்து நேர்மையாகச் செயற்படும் சக்திகள் ஒன்றிணைந்து பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதையும், அதே நேரத்தில் இலங்கைக்கு வெளியே வாழ்ந்துகொண்டிருக்கும் புலம்பெயர் ஈழத் தமிழர்கள் மற்றும் பரந்த தமிழர் சமுதாயத்தின் பல்வேறு தரப்பினரதும் ஒருமித்த ஆதரவு பெற்றுக் கொள்ளப்படவேண்டும் என்றும் நாங்கள் விரும்புகின்றோம். இந்த அடிப்படையில் இந்த முயற்சிகளுக்கு எமது மக்கள் அனைவரினதும் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் நாங்கள் நாடி நிற்கின்றோம்.

7. தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வலியுறுத்துவதிலும் அரசியல் சாசன ரீதியாக அவற்றை நிலை நாட்டிக் கொள்வதிலும் தமிழ் மக்கள் நேர்மையாகவும் உறுதியாகவும் தொடர்ந்து செயற்ப்பட்டு வந்துள்ளனர். தமிழ் மக்களின் முழுமையான அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் முகமாக எதிர்காலத்தில் நேர்மையுடனும் கொள்கை உறுதியுடனும் தமிழர் தேசத்தின் அரசியல் செயற்பாடு தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும். இதற்காக ஏற்கனவே பல்வேறு தமிழ்த் தேசியக் கட்சிகளும் வெகுசன அமைப்புகளும் ஒருங்கிணைந்து மக்களின் பங்கேற்புடன் தயாரித்து 2016 ம் ஆண்டு ஏப்ரல் 10ஆம் நாள் வெளியிடப்பட்ட தீர்வுத் திட்டத்தை அடிப்படையாக்க் கொள்ளமுடியும் என நாம் கருதுகின்றோம்.

8. இந்தக் குறிக்கோளை ஜனநாயக ரீதியான செயற்பாடுகளாலும் மக்கள் எழுச்சியினாலுமே சாதிக்க முடியும் என்பதை நாங்கள் வலியுறுத்தி, ஒரு பரந்த ஜனநாயக அரசியல் கட்டமைப்பாகவும் இந்த இலக்கினை முன்வைத்து சகல தமிழ்த் தேசிய சக்திகளையும் ஒன்றிணைத்துச் சாத்தியமான விதத்தில் ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கும், அதை முன்னெடுத்துச் செல்வதற்கும் எமது மக்களின் ஆதரவினை நாடிநிற்கின்றோம்.

9. இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடும் இரண்டு தரப்பினரும் எதிர்காலத்தில் தமிழ் மக்களின் விடுதலை கருதி ஓரணியாகச் செயற்படுவோம் என்பதனையும் வெளிப்படுத்துகின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7,33,104)


## பணிப்பெண் தேவை

மாதகலில் அமைந்துள்ள வீடு ஒன்றில் தங்கி நின்று வீட்டு வேலை மற்றும் குழந்தைகளைப் பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை.

◆தங்கி நின்று பணியுரிதல் வேண்டும்.
◆45 வயதுக்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்.
◆சம்பளம் 40,000/=

076 695 8498

(1194)

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்: •கிளிநொச்சி •சுன்னாகம் •சாவகச்சேரி •மானிப்பாய் •நெல்லியடி •பருத்தித்துறை •திருகோணமலை •வல்வெட்டித்துறை •கோப்பாய் •புத்தூர் •பண்டத்தரிப்பு •சங்கானை •கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-

0777-068-777
v2vacancies@gmail.com

(C-3106)

## கனடா - வரி இல்லாமல்

விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3970/-
11-16 Kg 2800/-
21-30 Kg 2640/-

குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery

UK 11Kg - 1420/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- Australia 11Kg - 1980/- Italy 11Kg - 2250/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237

(C-3106)

## சிறுநீரகம் தேவை

O+ இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரக நோயாளி ஒருவருக்கு அவசரமாக சிறுநீரகம் தேவைப்படுகிறது.
45 வயதுக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

074 076 8566

(4449)

## மணிவிழா வாழ்த்துக்கள்

மணிவிழா நாயகி

செல்வி மரியாம்பிள்ளை அன்ரனி சாந்தா

நெஞ்சம் மறக்குமா...!

03.06.2025



மணிவிழா காணும் நாயகி சாந்தாவுனக்கு
மடலெழுதி அனுப்பும் உயிர் நண்பி குகா!
பொழுதுகளெல்லாம் உனக்காகவும் எனக்காகவும் தானே
புலந்ததடி என் பிரியமானவளே! உனக்கு புரிகிறதா...?
எழுதும் மணிவிழா வாழ்த்தை சாந்தாவுனக்கு
என் கணவர் உன் இராஜன் அண்ணா! உன்னிடம் சேர்ப்பாரடி
பல்கலையில் புகுந்து பயின்று பசுமையான நினைவுகளுடன் வாழ்ந்தோமடி
பக்கத்தில் நானில்லையென்றாலும் உன் மணிவிழா சிறக்க நல்லாசிகளடி
எல்லோர் மனங்களிலும் இடம்பிடித்த என் சாந்தாவே!
என்றும் எங்கள் உறவுப் பாலமாக நீ விளங்க வேண்டுமடி!
நிறைவுக்கோர் கல்விப்புலத்தின் நாயகியே வாழி
நீள நினைப்பதற்குரிய கல்விப் பேரரசி சாந்தா வாழி
துறை தொறும் தொல்லறம் பெருக்கி பல்லாண்டு வாழி வாழி
இறையருள் ஆணையேற்ற எங்கள் சாந்தாவை நெஞ்சம் மறக்குமா!

Best Wishes



மணிவிழா நாயகி அன்ரனி சாந்தாவுக்கு
மன நிறைவான வாழ்த்துக்களை சேர்த்து மகிழ்வோர்
அமரர் திருமதி.குகனேஸ்வரி(குகா), இராஜேந்திரன்
இல.110/1, இராசாவின் தோட்ட வீதி, யாழ்ப்பாணம். T.P : 077 028 0527

## ஆகாஸ் நகை மாடம்

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3105) 076 825 7716 (ஆகாஸ்)

## தவறிவிட்டது

குணநாயகம் அருள்குமரன்

N.I.C No : 196910903468

அடையாள அட்டையும் சாரதி அனுமதிப்பத்திரமும் மோட்டார் சைக்கிள் இன்சூரன்ஸ், Tax என்பன கடந்த செவ்வாய்க்கிழமை (27.05.2025) பலாலி வீதி திருநெல்வேலிக்கும் யாழ். நகரத்திற்கும் இடையில் தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் பலாலி வீதி, திருநெல்வேலி சந்தியில் உள்ள இராசு களஞ்சியத்தில் அல்லது கலைவாணி அரிசி ஆலையில் ஒப்படைக்கும்படி தயவுகூர்ந்து வேண்டிக் கொள்கிறேன்.

077 230 9949
076 111 8559

(4447)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org